  

# வன்முறையின் அரசியல் பொருளாதாரம்:
## இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான பெண்களின் பொருளாதார தொடர்புகள்

பிரசாந்தி ஜயசேகர
நாதியா நஜாப்

ஜுலை 2017
ஆய்வுக் கட்டுரைத் தொடர் 23

cepa
centre for poverty analysis

# வன்முறையின் அரசியல் பொருளாதாரம்:
## *இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான பெண்களின் பொருளாதார தொடர்புகள்*

**பிரசாந்தி ஜயசேகர**

**நாதியா நஜாப்**

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் (CEPA) பிரசுரம்

ஜூலை 2017

**ஆய்வுக்கட்டுரை தொடர் 23, 2017**

(c) வறுமை ஆராய்ச்சி நிலையம் 2017
முதற் பிரசுரம் - 2017

ISBN : 978-955-1040-98-7

இலங்கை தேசிய நூலகம் - பிரசுரமாகும் தரவுகளை அட்டவணைப்படுத்தல்

ஜயசேகர, பிரசாந்தி

வன்முறையின் அரசியல் பொருளாதாரம்:
இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான பெண்களின்
பொருளாதார தொடர்புகள் / பிரசாந்தி ஜயசேகர, நாதியா நஜாப். -
கொழும்பு : வறுமை ஆராய்ச்சி நிலையம், 2017. -
ப. 36; செமீ. 29.

ISBN 978-955-1040-98-7
i. 305.482095493 DDC 23 ii. தலைப்பு
1. பெண்கள் - இலங்கை பொருளாதார நிலை

இவ் வெளியீட்டின் பதிப்புரிமை வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்கே சொந்தமானது. நூலாசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் ஒப்புதலுடன் இப் பதிப்பின் ஏதேனும் ஒரு பகுதி மீள் உருவாக்கலாம்.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பிரசுரத் தொடர்கள் தற்போது ஆய்வு கற்கைகள், திருத்தப்பட்ட புத்தக பதிப்புகள், செயற்பாட்டு கட்டுரைகள் மற்றும் சுருக்க கட்டுரைகளை உள்ளடக்குகின்றது. இவ்வாய்வு கற்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பொருள் விளக்கங்களும் முடிவுகளும் தனிப்பட்ட எழுத்தாளர்களையே சாரும் என்பதுடன் கட்டாயமாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் அல்லது இப்பிரசுரத்திற்கு ஆதரவளிப்போரது நோக்குகளையோ அல்லது கொள்கைகளையோ பிரதிபலிக்க வேண்டியதில்லை.

அட்டை பக்கத்தில் உள்ள புகைப்படம் அசோக் அலஸ் அவர்களுடையது.

இப்பிரசுரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பணிபுரிவோர் குழாமினை சார்ந்ததாகும்.

இப்பிரசுரம் தொடர்பான சகல விசாரணைகளுக்கும்:
வறுமை ஆராய்ச்சி நிலையம்
29 ஆர்.ஜி. சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 7, இலங்கை.
தொலைபேசி: 94 (011) 4690200, 2676955
தொலைநகல்: 94 (011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
இணையதளம்: www.cepa.lk

அச்சகம்: கீர்த்தி அச்சகம்
இல. 78, முதலாம் தெரு, இரத்மலானை
இலங்கை

இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு உத்தியோகஸ்த்தராக **நாதியா நஜாப்** அவர்கள் பணியாற்றிவருகிறார். இவர் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் BBusCom/Bcomn பட்டதாரி ஆவார். CEPA வில் நாதியா நஜாப், போருக்குப் பின்னரான இலங்கை மற்றும் இடப்பெயர்வு ஆகிய துறையில் முக்கிய கவனத்தை செலுத்தியிருப்பதுடன் பாதுகாப்பான வாழ்வியல் தொடர்பான ஆய்வொன்றை செய்திருக்கிறார். மோதலினால் பாதிக்கப்பட்ட போருக்கு பிந்தைய சூழல்களில், மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் மீது செலுத்தப்பட்டிருக்கும் தலையீடுகளின் விளைவுகளை பற்றி இந்த ஆய்வானது தெளிவுப்படுத்துகின்றது.

இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு உத்தியோகஸ்த்தராக **பிரசாந்தி ஜெயசேகர** அவர்கள் பணியாற்றிவருகிறார். இவர் ஸ்டேபோர்ஷெயர் பல்கலைகழகத்தில் BA பட்டதாரி ஆவார். பிரசாந்தி ஜெயசேகர பாதுகாப்பான வாழ்வாதார ஆராய்ச்சி கழகத்தின் ஆராய்ச்சியை நடத்தியதுடன், CEPA வில் தகவல் தொடர்புத் திட்டத்தின் மாற்று தகவல்தொடர்பு கூறுகளை ஒருங்கிணைத்துள்ளார். போருக்குப் பிந்தைய அரசியல் பொருளாதாரத்தில், பாலியல் வன்முறை மற்றும் மக்களின் பொருளாதார உறவுகள் ஆகியவை அவருடைய ஆராய்ச்சியின் நலன்களாகும்.

**வறுமை ஆராய்ச்சி நிலையம்** ( சேபா ) வறுமை தொடர்பான அபிவிருத்தி பிரச்சனைகள் பற்றிய உண்மையான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக செயற்படும் இலங்கையின் சுயாதீன நிறுவனம் ஆகும். சேபா நிறுவனத்திற்குள் எங்களது நோக்கம் சுயாதீன பகுப்பாய்வு, அபிவிருத்தி நடவடிக்கையாளர்களின் திறன்கள் மற்றும் கொள்கைகளுக்காக விளைவுகளை செய்ய வாய்ப்புகள் தேடிபார்ப்பதற்கு பொருளாதார சந்தை தேவைகளுக்கு மறுமொழி பண்ணுவதுடன் தற்போதைய நிலையில் நடைமுறை ஆராய்ச்சியில் தங்கியுள்ள சேவையை வழங்குவது எங்கள் நிறுவனத்தின் முக்கியமான செயற்பாடாக இருக்கின்றது. சேபா நிறுவனம் பொருளாதார சந்தையின் மாற்றத்துடன் செயற்படுவது சேவையாளர்களின் கோரிக்கைகளுடன் மற்றும் போரின் பின்னரான அபிவிருத்தி, ஆபத்தான நிலைமைகள், இடம்பெயர்தல், அத்தியாவசிய சேவைகள் , சுற்றாடல் போன்ற ஐந்து தலைப்புகளிற்கு அடிப்படையில் செய்யும் சமமான சுயாதீன ஆராய்ச்சி கற்கையூடாக.

# நன்றியுரை

பாதுகாப்பிலான வாழ்வாதார ஆராய்ச்சிக் கூட்டமைப்புக்கு பங்களிப்பாக இலங்கை, கொழும்பு வறுமை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களினால் மோதலினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் வாழ்வாதாரங்களையும், அடிப்படைச் சேவைகளையும் மற்றும் சமூகப் பாதுகாப்பினையும் ஆராயும் ஆறு வருட உலகளாவிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்றுக்காக இந்த ஆய்வறிக்கை எழுதப்பட்டுள்ளது. பிரசாந்தி ஜயசேகர மற்றும் நாதியா நஜாப் ஆகியோரை உள்மைய ஆராய்ச்சிக் குழாம் கொண்டிருந்தது. யாஜ்னா சண்குகன், மீரா பிலிப்ஸ் மற்றும் விஜய் நாகராஜ் ஆகியோரின் முக்கிய பங்களிப்பு ஆய்வு முழுவதும் வழங்கப்பட்டதோடு பகுப்பாய்வு கட்டத்தில் அவர்கள் வழங்கிய கருத்துக்கள் விலைமதிப்பற்றனவாக இருந்தன.ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கியதோடு மட்டுமன்றி மதிப்பாய்வு வரைவுகள் மற்றும் ‘‘சிறந்த விளக்கங்களையும் நயமான புரிதலையும்’’ தொடர்ந்து மேற்கொள்வதற்கு உந்துதலாகவும் இருந்த கலாநிதி. வகிஷா குணசேகர, விஜய் கே. நாகராஜ் மற்றும் பிரியந்தி பெர்னான்டோ ஆகியோருக்கு சிறப்பான நன்றிகள்.சகுந்தலை முத்துராஜா, சசிகலா சாமுவேல், மேகலா மகிழ்ராஜா, தம்பிப்பிள்ளை சரோஜினி மற்றும் கார்த்திகா சிவராஜா ஆகியோரின் உதவியின்றி யாழ்ப்பாணத்தில் வெளிக்கள ஆராய்ச்சி சாத்தியப்பட்டிருக்கமாட்டாது. எமது வழிகாட்டும் குழுவில் ஒரு பகுதியாக இருந்த பிரியா தங்கராஜா, கலாநிதி. ஹரினி அமரசூரிய, கலாநிதி. மாலதி டி அல்விஸ், சரலா இமானுவேல் மற்றும் அம்பிகா சற்குணநாதன் ஆகியோருக்கும் நாங்கள் எமது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். தகவல்களை பகிர்ந்துகொண்டதற்கும் அவர்களது ஆதரவினை வழங்கியதற்கும் அனைத்து கல்வியாளர்கள், ஆர்வலர்கள், அரச அதிகாரிகள்,அபிவிருத்தி செயற்பாட்டாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளுக்கும் எமது நன்றிகள். தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் ‘‘இழிவான வேறுபாடுகள்’’ என்பவற்றை வாழ்க்கையில் சந்திக்கின்ற போதிலும் அவற்றினை எதிர்த்து நிற்கின்ற கிராமத்துப் பெண்களுக்கு இவ்வாய்வு அறிக்கையினை அர்ப்பணிக்கின்றோம்.

அனைத்துப் பிரதேசங்களின் பெயர்கள் மற்றும் பதிலளித்தவர்களின் பெயர்கள் அவர்களின் அடையாளத்தினை பாதுகாப்பதற்காக மாதிரிப்படுத்தப்பட்டுள்ளது (நட்சத்திர குறியீட்டினால் குறிப்பிடப்பட்டுள்ளது*).

வாழ்வாதார ஆராய்ச்சிக் கூட்டிணைப்பு (Secure Livelihoods Research Consortium (SLRC)) நிறுவனமே முதல்முறையாக இத்தொகுப்பினை ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். அதன் தமிழ் மொழிபெயர்ப்பினை வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் வெளியிடுகின்றோம்.

# உள்ளடக்கம்


நன்றியுரை ....................................................04

1. அறிமுகம் ....................................................06
   1.1. வன்முறைக் கட்டமைப்பு....................................................06
2. ஆராய்ச்சி முறை....................................................08
   2.1. தரவின் வரையறைகள் ....................................................10
3. கிராமம்....................................................11
4. பாதுகாப்பற்ற ''உட்புறம்'' மற்றும் ''வெளிப்புறம்'': பெண்களின் வாழ்வாதாரத் தெரிவுகள் ....................................................13
   4.1. மீன்பிடியிலிருந்து பெண்களின் தொடர்பு துண்டிக்கப்படல் ....................................................13
5. பீடி மற்றும் வன்முறை திரட்டல்....................................................17
   5.1. பீடி கைத்தொழில் ....................................................17
   5.2. வெட்டிக்காட்டிலிருந்து பீடி குச்சிகளுக்கான மூலப்பொருட்கள்....................................................17
   5.3. பீடி உருட்டல்: நோயுற்ற சுயவேலைவாய்ப்பு ....................................................19
6. வெட்டிக்காட்டில் பீடி உருட்டுபவர்களின் வாழ்க்கை நிலை ....................................................21
7. வன்முறை, உயிரற்ற முதலாளித்துவம் மற்றும் வெட்டிக்காடு பீடி கைத்தொழிலில் துறையில் குறைந்த சாதி பெண்களின் இனப்பெருக்கம்....................................................23
   7.1. இரட்டிப்புச் சுமை, போர் மற்றும் பெண்கள் உழைப்பு ....................................................23
   7.2. முறையின்மை, உயிர் பிழைத்தல் மற்றும் திரட்சி ....................................................24
   7.3. வெட்டிக்காடு அபிவிருத்தி தோல்விக்கான முகமல்ல....................................................25
   முடிவுரை: ஒரு உயிரற்ற முதலாளித்துவம் நிலவும் இடத்தில் அமைந்த பெண்கள் அமைப்பு ....................................................27

உசாத்துணை ....................................................28
இணைப்புகள் 1: பதிலளித்தவர்களின் விபரம் ....................................................30

# அறிமுகம்

மே 2009ல் இலங்கையின் நீண்டகால யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், நாட்டின் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலுள்ள பெண்களுக்கு எதிரான உடல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைக்கெதிராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட்டது. இக்கற்கையானது, உடல் ரீதியான வன்முறை வடிவங்களைத் தாண்டி அரசியல், பொருளாதார உறவுகள் மற்றும் செயல்முறைகள் மூலமாக உருவாக்கப்பட்டு நிலைத்துள்ள கட்டமைப்பு வன்முறையை வெளிச்சத்திற்கு கொண்டு வரவும் பால், இனம் மற்றும் வர்க்கம் என்பனவற்றுடன் அவை கொண்டுள்ள இடைத்தொடர்புகளையும் நோக்க முனைகின்றது.

பெண்களால் அனுபவிக்கப்பட்ட வன்முறைகளை அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்புகள் அடிப்படையில் புரிந்து கொள்ளவேண்டும் அத்தோடு பெண்கள் வெறுமனே உடல் ரீயாக அல்லாமல் வன்முறையின் அடையாளத்தை சுமக்கின்ற தொழிலாளர்கள் என்பதை இவ்வாய்வானது பிரதான கருத்தாக கொண்டமைகின்றது. யாழ்ப்பாணத்தின் ஒரு மீன்பிடி கிராமமான வெட்டிக்காட்டில்*மேற்கொள்ளப்பட்ட பீடி சுருட்டுபவர்கள் (கையினால் சுருட்டப்படுகின்ற சிகரெட்டுகளை தயாரிப்பவர்கள்) தொடர்பான ஒரு விடய ஆய்வினூடாக, பால், ஜாதி மற்றும் வர்க்க ஒடுக்கு முறை அதேபோல அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டிற்குமிடையிலான தொடர்புகள் மற்றும் அவை தீராத வன்முறைகள் மூலம் எவ்வாறு நிலைநிறுத்தப்படுகின்றன என்பதை இக்கற்கை விளக்கி நிற்கின்றது.

உண்மையில் வன்முறையானது, வெறுமனே ஒரு விளைவு என்பதிலிருந்து விலகி வேறுபட்ட வழிகளில் நிர்மானிக்கப்பட்ட, சட்டபூர்வ அங்கீகாரம் கொண்ட மற்றும் எப்போதும் துணை நோக்கங்களை வடிவமைக்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது. பாலின ரீதியான தொழில்பிரிப்பின் இடைத்தொடர்பு, இடவசதி மற்றும் ஒரு நாடுகடந்த உயிரற்ற முதலாளித்துவ [1] பீடித் தொழிலில் வெட்டிக்காட்டு பீடி உருட்டும் பெண்களின் அனுபவங்கள் மற்றும் பின்னணிகளை இவ்வாய்வானது கண்டறிய முற்படுகின்றது.

## 1.1 வன்முறையை கட்டமைத்தல்

ஜோகன் கல்டங் என்பவரின் வன்முறை தொடர்பான கோட்பாடானது, உடல் (நேரடியாக), கட்டமைப்பு மற்றும் சலாசார வன்முறை தொடர்பில் ஒரு தெளிவான விளக்கத்தை வழங்குகின்றது. உதாரணமாக, வறுமையானது, கட்டமைப்பு வன்முறையின் ஓர் வடிவமாகும் ஏனெனில் இது மனிதனின் அடிப்படை தேவை மற்றும் மனித வாழ்க்கை என்பவற்றை மக்களுக்கு பெற்றுத்தர மறுக்கின்றது. அதனால்தான், வன்முறையை தோற்றுவிக்காத ஒரு ‘‘சமூக மற்றும் உலக கட்டமைப்பில்’’ வாழ்வதற்கான உரிமையே ஆழமான மனித உரிமையாக இருக்கும் (Galtung, 1994 cited in Confortini, 2006: 338) எனக் குறிப்பிடுகின்றது.

வன்முறையை புரிந்துகொள்கின்ற போது, ‘‘மனித வாழ்வில் அடிப்படை தேவைகளை தவிர்க்கக்கூடிய குறைபாடுகள்’’ எவை என இக்கற்கை கேள்வியெழுப்புகின்றது (Galtung, 1993 cited in Ho, 2007: 3). எவ்வாறு அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்புகள் மற்றும் உறவுகள் என்பன இம்முக்கியமான கருத்துக்களை சிதைக்கின்றன என்பதை அவதானிக்க வன்முறையை உடல் பாதுபாப்பு அல்லது உடல் ஒருமைப்பாடு ஆகியவற்றின் ஒரு சமரசமாக புரிந்துகொள்வதற்கு அப்பால் இது செல்கின்றது.

ஜாதி மற்றும் வர்க்கம் உட்பட அதிகாரத் தொடர்புகள் மற்றும் சமமின்மையை(Confortini, 2006), உள்ளடக்கிய சமூக கட்டமைப்பான பாலினத்தோடு தொடர்புடைய வன்முறையே எமது விசாரணையின் மையமாக அமைந்தது. ஏனெனில், அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்புகள், செயல்முறைகள் வடிவம், பால் சார்ந்த வன்முறைகளை நிலைநாட்டும் செயல்கள்,பெண்ணியம் சார் அரசியல் மற்றும் பொருளாதாரம் அணுகுமுறையை தழுவி நிற்கின்ற ஓர் கற்கையாகும் (Sjoberg, 2010; Sjoberg and Lobasz, 2012 cited in True, 2012). வன்முறையின் பால் சார்ந்த பரிணாமங்களையும்அது எவ்வாறு அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகளோடு இயல்பாக அமையப்பெற்றுள்ளது என்பதையும்இந்த அணுகுமுறையினூடாகநாங்கள் பரீட்சித்துப் பார்க்கிறோம்

[1] அதிகமாக சுரண்டப்படுகின்ற சமூகம் அத்தோடு வறுமையில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு வடிவங்களில் ஒடுக்கப்படுகின்றவர்கள் இறக்கும் வரையில் அல்லது கடுமையான உடல்நலக் குறைவுக்கு ஆளாகும் வரையில் தொழிலாளர்களாகவே இருக்கின்ற அரசியல் பொருளாதார உறவுகள் அமைகின்ற சூழ்நிலையின் மீதே ஒரு உயிரற்ற முதலாளித்துவ முறையானது அமைந்துள்ளது.

வீடு மற்றும் வேலைத்தளங்களுக்குள்ளே பெண்கள் எதிர்நோக்கும் அன்றாட வன்முறைக்கு பங்களிப்புச் செய்கின்ற காரணிகள் மற்றும் கூறுகள் போன்றவற்றை வெளிப்படுத்துவதற்கு இந்த பெண்ணிய அரசியல் பொருளாதார அணுகுமுறையானது அனுமதியளிக்கின்றது. இது, வன்முறையானது பெண்களுக்கு என்னமாதிரியான பாதிக்கப்புகளை ஏற்படுத்துகின்றது என்பதை மட்டும் சித்தரிக்காது இந்த வன்முறையானது, அரசியல் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் கட்டமைப்புகளுக்குள்ளே வேரூன்றுவதற்கு வழியாகின்றதுஎன்பதையும் விளக்குகின்றது. ஜெக்கியு ட்ரூவ் போன்ற அறிஞர்கள் அவர்களது கற்கையிலுள்ள பால் சார்ந்த வன்முறையை புரிந்துகொள்வதற்கு இந்த அணுகுமுறையையே பிரயோகித்துள்ளனர் (True, 2012).

''பல சிக்கலான அமைப்புகள், ஒடுக்குமுறையின் ஒரே மாதிரியான அமைப்புக்கள்''போன்றவற்றை வெளிப்படுத்துவதற்கு தேவைப்படும் ஒரு கண்ணாடியாகவே இப்பெண்ணிய அரசியல் பொருளாதார அணுகுமுறை நோக்கப்படுகின்றது(Crenshaw, 1995, cited in Central America Women's Network, 2010: 10).

வற்புறுத்தலின் வடிவமான வன்முறை என்பது கண்ணுக்கு புலப்படும், உடல் சார் நிலைமாற்றத்தை வெளிப்படுத்துவது மட்டும் அல்லாது ''உற்பத்தியின் கட்டமைக்கப்பட்ட உறவுகள் மற்றும் பங்கீட்டினை நிர்வகிக்கின்ற இனப்பெருக்கம் மற்றும் வளங்களின் பயன்பாடு, நன்மைகள், சலுகைகள், வீட்டிற்குள் மற்றும் நாடுகடந்த சமூகத்தின் அதிகாரம்'' போன்றவற்றையும் வெளிப்படுத்துகின்றது (Whyte, 2009, cited in True, 2012: 29- 30).

இந்த வன்முறையானது, குறைந்த ஊதியம், சந்தை மற்றும் வர்த்தகத்தின் ஆபத்தான நிலைமைகள், தீர்மானம் எடுப்பதிலுள்ள கட்டுப்பாட்டின் பற்றாக்குறை, சொத்துரிமைகளின் மறுப்பு மற்றும் ஆண்களின் பாலியல் சலுகைகள் போன்ற வடிவத்தில் இருக்க முடியும் (Connell, 1998, cited in True, 2012). இந்த முடிவுக்கு, பெண்கள் தொழிலாளர்களாக மற்றும் பராமரிப்பவர்களாக இருப்பதால், பெண்களின் பாதுகாப்பின்மையானது பிரிக்க முடியாதளவிற்கு இந்த இரட்டைச் சுமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, அந்த கருத்துக்களின் மூலம் ''யார் சொந்தமாக மற்றும்/அல்லது செல்வத்தினை தோற்றுவிக்கும் சொத்தின் மீது கட்டுப்பாடுகளை மேற்கொள்ளமுடியும்…கருத்தியலை வடிவமைக்கக்கூடிய முக்கிய நிறுவனங்கள் மீது நேரடி மற்றும் மறைமுக கட்டுப்பாடுகளை மேற்கொள்ளமுடியும்''(Agarwal 1994: 16),நாட்டின் போர் அல்லது போரல்லாத நிலைமைகளை விட இக்கற்கையானது, நிறுவனங்கள் மற்றும் கருத்தியல்கள் மீதே அதிக கவனம் செத்துகின்றது.

இந்த வன்முறைக் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு, இந்த கற்கையுடன் தொடர்புடையதான முக்கிய ஆய்வு வினாக்கள் பின்வருமாறு:

1 போருக்கு பிந்திய சூழ்நிலையில், பாலினம் சார் அரசியல் பொருளாதார உறவுகள் மூலம் எவ்வாறு இந்த வன்முறையானது பெண்களின் வாழ்வில் (மீண்டும்) உருவாக்கப்படுகின்றது?

2 இந்த வன்முறையின் இயல்பு என்ன மற்றும் அதனை மீண்டும் உருவாக்குகின்ற நிலைமைகள் எவை? பாலினம் மற்றும் சாதி மற்றும் வர்க்க உறவுகள் போன்றவற்றின் இடைத்தொடர்பின் மூலம் எவ்வாறு இந்நிலைமைகள் வடிவமைக்கப்படுகின்றன?

அடிப்படை உரிமைகள் மற்றும் சமூக பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபடும் வகையில் வெட்டிக்காடு பெண்களால் அனுபவிக்கப்படுகின்ற வன்முறைகளுக்கு எவ்வாறு அரசானது பங்களிப்புச் செய்கின்றது?

# 2. ஆய்வு முறை

கற்கையானது முதலில் கருத்துருவாக்கப்பட்ட போது, யுத்த காலத்தில் நிகழ்ந்த கடுமையான குற்றங்களின் [2] விளைவுகளை குறிப்பாக போருக்கு பிந்திய சூழ்நிலையிலுள்ள மற்றும் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் தொடர்பான கவனம் என்பவற்றை புரிந்துகொள்வதே இக்கற்கையின் பரந்த ஆர்வமாக இருந்தது. [3] எனினும், ‘‘கடுமையான குற்றங்கள்’’ தொடர்பான கட்டமைப்பொன்றினை பயன்படுத்துவதிலுள்ள வரையறைகள் மீது அக்கறை செலுத்துவதோடு அரசியல் பொருளாதார வன்முறைகள் தொடர்பான ஓர் ஆய்வினை நோக்கி இக்கற்கையின் கவனம் நகர்வடைந்துள்ளது. கணிசமான மற்றும் ஆய்வு முறைப் பிரச்சினைகள் தொடர்பில் ஒரு சிறந்த புரிதலை விருத்தி செய்வதற்காக கல்வியாளர்கள், சமூக சேவையாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் இலங்கையின் சூழ்நிலைத் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வு மற்றும் போருக்கு பின் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பெண்களால் முகங்கொடுக்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆழமான அறிவினைக் கொண்ட அனுபவமிக்க ஆர்வலர்களையும் உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவொன்றுடன் கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

வழிகாட்டல் குழுவுடனான இம்முதற்கட்ட கலந்துரையாடல்கள் மற்றும் முக்கிய நபர்களுடனான நேர்காணல்களுடன்[4] இணைந்து யாழ்ப்பாணத்திற்கு சென்று மேற்கொண்ட வெளிக்கள ஆய்வு போன்றன, விரிவான ஆய்வு வினாக்களை விருத்தி செய்யவும், முடிவு செய்யவும் எமக்கு அனுமதியளித்தன. நான்கு ஆராய்ச்சி தளங்களில் ஒன்றான வெட்டிக்காட்டின் தனிப்பட்ட புவியியல், சனத்தொகை மற்றும் அரசியல் பொருளாதார பண்புகளானது, ஆய்வு வினாக்களை நன்றாக பரிசோதிக்கவும், கட்டவிழ்க்கவும் மிகவும் பொருத்தமானது என்பதை நாம் உணர உதவியது. தரப்பட்ட காலவரை மற்றும் தகவல்கள் தொடர்பான ஆழமான பகுப்பாய்விற்கான தேவை போன்றவற்றால் வழிகாட்டல் குழுவின் பரிந்துரையின்படி, குறிப்பிட்டவொரு பிரதேசத்தின் மீது கவனத்தினை மட்டுப்படுத்திக் கொள்வதற்கு நாங்கள் தீர்மானித்தோம்.

பெண்களின் வாழ்க்கை, பொருளாதார உறவுகள் மற்றும் வன்முறையின் அனுபவம் மற்றும் அதனை வெளிப்படுத்துவதற்கான வழிகள் தொடர்பில் ஒரு சிறந்த விளக்கத்தினை வடிவமைப்பதற்கு பண்பு சார் அணுகுமுறையானது பயன்படுத்தப்பட்டுள்ளது. அர்த்தத்தினை விளங்கிக்கொள்ளல், குறிப்பிட்ட உறவுகள் மற்றும் நடைமுறைகளை சுற்றியுள்ள உள்ளுணர்வுகள்,இக்கற்கைக்கு இன்றியமையாததாக நோக்கப்பட்ட பண்புசார்ந்த முறைகள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வு வினாக்களை பரிசோதிப்பதற்கும், கட்டவிழ்ப்பதற்கும் ஒரு விடய ஆய்வாக வெட்டிக்காட்டினை அணுகுவதன் மூலம், பெண்களின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உண்மைகள் தொடர்பில் ஒரு நேர்த்தியான புரிந்துகொள்ளலை உருவாக்குவதற்கு இந்த கற்கையானது முயன்றுள்ளது. விடய ஆய்வு அணுகுமுறையானது, அதிளவில் அரசியல் பொருளாதார நிபுணர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளுத (Gereffi, 1978; Evans, 1979; Ahiakpor, 1985; Greico, 1990; Krasner, 1991; Keohane and Milner, 1996) அத்தோடு, இது வளர்ச்சியில் அல்லது வேறுபட்ட கோட்பாடுகளை விமர்சிப்பதில் பயனள்ளதாகவும் மற்றும் குறித்த சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உண்மைகளை விசாரிப்பதாகவும் உள்ளது (Yin, 2012).

பல பண்புசார் முறைகள் இந்த ஆய்விற்கென பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. முதல்நிலை தரவு சேகரிப்பினை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலானது ஐந்து மாத காலப்பகுதியில் மூன்று முறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஓரளவு தனிமைப்படுத்தப்பட்ட இயல்புள்ள கிராமம் மற்றும் தாங்கள் ‘‘தனிப்பட்ட’’ அல்லது ‘‘உள்ளக’’ ரீதியான விவகாரங்கள் என உணரப்பட்டவற்றை பகிர்ந்துகொள்ள முன்வருவதில் கிராமத்தவர்களின் பொதுவான விழிப்புணர்வு காரணமாக, கிராமத்திலுள்ள பெண்கள் அமைப்பொன்றினால்

---

[2] கடுமையான குற்றம் எனும் கற்கையானது,SLRC உகண்டா குழுவால் ‘இன்று வடக்கு உகண்டாவிலுள்ள குடும்பங்களின் மீது யுத்தத்தின் போது இடம்பெற்ற கடுமையான தாக்கம்’ என்ற தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட SLRCன் முன்னைய ஒரு ஆய்வின் விளைவாகும்.

[3] அரசு அல்லது அரசு சார்பற்ற செயற்பாட்டாளர்கள் மூலம் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டது ஏனெனில், அங்குதான் பல வளர்ச்சி தலையீடுகள் இருந்தன அத்தோடு போருக்கு பின்னரான சூழ்நிலைகளில் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு வகுப்பாகையால் இது ஒரு இலக்கு குழுவாக கருதப்பட்டது.

[4] கல்வியாளர்கள்,ஆர்வலர்கள் மற்றும் தத்தமது துறையில் நிபுணர்களாக இருக்கின்ற சமூகத் தொழிலாளர்கள் ஆகியோர் வழிகாட்டும் குழு மற்றும் முக்கிய நபர்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்

வழங்கப்பட்ட வசதி மூலம் நாங்கள் கிராமங்களுக்கு சென்றிருந்தோம்[5]. ஆரம்பகட்ட வெளிக்கள பயணித்தின் போது, யாழ்ப்பாணத்தின் அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளை விளங்கிக்கொள்வதற்கு 15 முக்கிய நபர்களுடனான நேர்காணலானது மேற்கொள்ளப்பட்டது. முக்கிய நபர் நேர்காணலில் பெண்கள் ஆர்வலர்கள், இலாப நோக்கமற்ற அமைப்புகள், கல்வியாளர்கள், அரச அதிகாரிகள் மற்றும் கிராமப் பெண்கள் போன்றவர்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

அடுத்த இரு வெளிக்கள ஆய்வுகளில், 8 இலக்குக் குழுக்கள் கலந்துரையாடல், 26 முக்கிய நபர் நேர்காணல்கள் மற்றும் 15 நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு பின்தொடர் நேர்காணல்களும் அதே நபர்களுடன் பல தடவைகள் நடாத்தப்பட்டன. எட்டு இலக்குக் குழு கலந்துரையாடல்களும் கிராமத்துக்குள்ளே மற்றும் கிராமத்துக்கு வெளியேயுள்ள வீட்டுப்பணிப் பெண்கள், கிராமத்திற்கு வெளியே வேலைசெய்கின்ற பெண்கள், இளம்பெண்கள், கிராமத்தின் வயதானவர்கள், கிராமத்திலுள்ள பிள்ளைகள் கல்வி கற்கின்ற பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள், யாழ்ப்பாண பெண்கள் உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் பிரதேச அலுவலகத்தோடு தொடர்புடைய அரச அதிகாரிகள் உள்ளடக்கிய பல்வேறுபட்ட குழுவுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன.முக்கிய நபர் நேர்காணலானது, தற்போதைய உள்ளூர் அரச உத்தியோகத்தர்களான வெட்டிக்காடு கிராம சேவையாளர்[6], பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளரர் (DS), தற்போதைய பொது சுகாதார கண்காணிப்பாளர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் உரிய பிரதேச செயலகத்தின் நன்னடத்தை அதிகாரி,வெட்டிக்காடு மேற்பார்வை ஆலோசகர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருடன் கிராமத்தைச் சேர்ந்த அதிகார அந்தஸ்தை கொண்ட ஏனைய தனிநபர்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கிராமத்தின் உட்புற மற்றும் வெளிப்புற கருத்துக்களை பெறுதலானது, கண்ணோட்டத்தினை அறிந்துகொள்ளவும் வன்முறையின் அனுபவங்கள் மற்றும் அரசியல் பொருளாதார உறவுகளின் முக்கோணத் தொடர்பினையும் பெற்றுக்கொள்ளவும் அனுமதித்தது. இலக்குக் குழு கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், சமூக மற்றும் அதிகார நிலையறியும் செயல்முறைப் பயிற்சி போன்றன பிரதேசத்தவர்களுக்கு நன்கு பரிச்சயமான மற்றும் பூர்வீகமாக தமிழ் மொழியைப் பேசக்கூடிய ஒருவரால் தலைமைதாங்கப்பட்டிருந்தன. இலக்குக் குழு கலந்துரையாடல் மற்றும் நேர்காணல்கள் போன்றவற்றில் இரண்டு அல்லது மூன்று குறிப்பு எடுப்பவர்கள் கலந்துகொண்டிருந்ததோடு அவர்கள் வாய்மொழி மூலம் மற்றும் வாய்மொழியற்ற தரவுகளை குறிப்பெடுத்துக் கொண்டனர்.

இக்கற்கையில் பயன்படுத்தப்பட்ட மற்றுமொரு முறையான பங்குபற்றுனர்களை அவதானித்தலானது, மக்களின் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும், உணர செய்வதற்கும் மற்றும் அவர்கள் வசிக்கின்ற, வேலைசெய்கின்ற குறிப்பிட்ட சூழலுடன் கொண்டுள்ள இடைத்தொடர்புகள் அத்துடன் எவ்வாறு பதில்கள் வழங்கப்பட்டிருந்தன என்பதை விளக்குவதன் மூலம் பதிலளிப்பாளர்களின் வார்த்தைகளை அவதானிப்பதற்கும்எங்களுக்கு வாய்ப்பினை வழங்கியது.

குழு ஆய்வாளர்களின் வேறுபட்ட அவதானிப்புகளை ஒன்றிணைப்பதற்கும், அது தொடர்பில் சிந்திப்பதற்கும் மற்றும் ஆய்வாளர்களினால் வேறுபட்ட வகையில் விளங்கிக்கொள்ளப்பட்ட பல்வேறு முறைகளை பகிர்ந்துகொள்வதற்கும் மற்றும் வெளிக்கள ஆய்வின் போதுஎன்ன கேட்கப்பட்டது மற்றும் அவதானிக்கப்பட்டது என்பதை புரிந்துகொள்வதற்கும் ஒவ்வொரு நாளின் முடிவின் போதும் ஆய்வுக் குழுவானது ஒன்று கூடியது. ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தெளிவான குறிப்புகள் மற்றும் நினைவில் கொள்ளப்பட்ட விடயங்களானது இறுதிப் பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

குழு ஆய்வாளர்கள் மத்தியில் தரவு பகுப்பாய்வு செயற்பாடானது மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு நேர்காணல் குறிப்புகள், ஒவ்வொரு தனிநபரின் வாழ்க்கை கதை என்ன என்பதை தெளிவாக விளக்க முயற்சிக்கின்ற கள அவதானிப்புகள், முக்கியமான நேர்காணல்கள் மற்றும் ஆய்வு வினாக்களை விளக்கும் வகையில் அமைந்த இலக்குக்குழு கலந்துரையாடல் போன்றவற்றில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை அவர்கள் செலவிட்டனர். ஏவ்வாறு இவ்வன்முறையானது ஒவ்வொரு நாளும் பெண்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்றது அத்தோடு எவ்வாறு வன்முறையானது கட்டியமைக்கப்பட்டுள்ளது மற்றும் செயற்பட்டுள்ளது என்பதை விளக்குவதற்கும் ஆய்வாளர்கள் பெண்களின் வாழ்க்கை முறைகள் தொடர்பில் ஒரு குறிப்பிடத்தக்க கவனத்தினை செலுத்தினர்.மேலும் பகுப்பாய்வின் முக்கிய கருத்துக்களை உறுதிப்படுத்துவதற்கு மற்றும்

---

[5]விதவைகள் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வெட்டிக்காடில் அமைக்கப்பட்டுள்ள ஒரு ஆதரவு குழுவாகவே இந்த அமைப்பு காணப்படுகின்றது. இவ்வமைப்பானது பெண்களுக்கு கடன்கள் மற்றும் தமது மனக்குறைகளை பகிர்ந்து கொள்வதற்கு உதவுகின்றது. கிராமத்திலுள்ள பெண்களுக்கான பெரிய மற்றும் சக்தி வாய்ந்த ஒரு அமைப்பொன்றாகும்.

[6]கிராம உத்தியோகத்தரே குறைந்த நிர்வாக அலகாக காணப்படுகின்றார்.

சேகர்க்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வின் முக்கிய கூற்றினை வெளிக்கொண்டுவருவதற்கும் இந்த தனிப்பட்ட ரீதியான மற்றும் கூட்டான வாழ்க்கை அனுபவங்களின் ஆழமான பகுப்பாய்வானது, ஆய்வாளர்களுக்கு உதவியது.

## 2.1 தரவு வரையறைகள்

தரவின்அடிப்படை வரையறைகளில் ஒன்று, சில நேர்காணல்கள் உள்ளூர் பெண்கள் அமைப்பினூடாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது மற்றும் இது சிலவேளை கிராமத்தின் தனிமைப்படுத்தப்பட்ட இயல்பினை தருவதாகவும், சில நபர்கள் கிராமம் மற்றும் அதன் நடைமுறைகளை விமர்சிக்கும் வகையில் அமையுமென நினைத்து எதையும் சொல்லத்தயங்கியிருந்தார்கள். கற்கையினை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட காலம் மற்றும் வளங்கள் என்பன வரையறுக்கப்பட்டமை, அத்தோடு உடல் ரீதியான வன்முறைகள் தொடர்பில் பெண்களிடம் பகிரங்கமாகவும் சுதந்திரமாகவும் கதைப்பது என்பது தமிழ் சமூகங்களில் மற்றும் இலங்கையின் பொதுவான சலாசாரம் என்பவற்றில் விலக்கப்பட்ட ஒன்றாக இருப்பதோடு இக்கற்கைக்கான சவாலாக அமைகின்றது.பதிலளிப்பாளர்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு மீண்டும் மீண்டும் கள ஆய்வினை மேற்கொண்டிருந்ததோடு குழு அமைப்பிற்கு வெளியே ஏதாவது வேறுபட்ட கருத்துகள் வெளிப்பட்டால் அதனை அறிந்துகொள்ளும் ஒரு முயற்சியில், தெரிவுசெய்யப்பட்ட தனிநபர்களை கொண்ட இலக்கு குழு கலந்துரையாடலானது மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் தரவகளில் இருந்த சில குறைபாடுகளை நீக்கமுடிந்தது.

# 3. கிராமம்

வெட்டிக்காடு அருகிலுள்ள கடற்கரையிலிருந்து ஏறத்தாள 4கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஒரு மீன்பிடி கிராமமாகும். இக்கிராமத்தில் வசிப்பவர்கள் போராடக்கூடிய மற்றும் முரட்டுத்தனமானவர்கள் என்ற கண்ணோட்ட வெளியாட்கள் மத்தியில் இருந்து வருகின்றது. உண்மையாக, வெட்டிக்காட்டில் வசிக்கும் சிலர் அதனைன பெருமையுடன் ஏற்றுக் கொள்வதாக தெரிவதுடன் அவர்கள் வெளியாட்கள் ‘‘எங்களுக்கு குழப்பம் விளைவிப்பவர்களாக’’ இல்லை எனவும் கூறுகின்றனர்.

வெட்டிக்காடு கடற்கரையிலிருந்து சிறிது விலகியிருந்தாலும், மீன்பிடியே ஆண்களின் முதன்மையான வாழ்வாதாரம் ஆகும். மீன்பிடி தொடர்பான திறமையானது தலைமுறைகளினூடாக பரிமாரப்படுவதோடு வரலாற்று ரீதியாக அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற வாழ்வாதாரம் மீன்பிடி மட்டுமே. விஜய்* என்பவர் கிராமத்தின் ஒரு வயதான வரலாற்றசிரியர், இவர் அவர்களது முன்னோர்கள் சிலந்தூர்* எனும் தீவிலுள்ள அம்மன்குடி* எனும் பிரதேசதில் இருந்தனர் எனக் கூறினார், இது அவர்களின் மீன்பிடி பாரம்பரியத்தை விளக்கி நிற்கின்றது. அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) மற்றும் இலங்கை இராணுவத்திற்கிடையில் நிகழ்ந்த கடுமையான மோதலினால் வெட்டிக்காட்டினை விட்டு இடம்பெயர்ந்த போதிலும் கூட, தமக்கு சாத்தியமான வாழ்வாதாரமான மீன்பிடியில் ஈடுபட முடியுமென அவர்கள் கடலுக்கு நெருக்கமான பகுதியில் தஞ்சம் புகுந்தனர்.

கிராமத்தில் ஒரு மூலையில் மாலுமிகளின் புனித ரட்சகரான புனித அந்தோனியாரின் சிலையொன்று அமைந்துள்ளதோடு அண்மையில் கிறிஸ்தவர்களாக மாறிய நான்கு அல்லது ஐந்து குடும்பங்களை தவிர பெரும்பாலும் இந்து மதத்தை சேர்ந்த மக்களே அதிகம் காணப்படுகின்றனர். இந்து மத கோவில்கள்[7] பல கிராமத்தை சுற்றி பரந்து காணப்படுவதோடு அவற்றில் பல கிராமத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற பாரம்பரிய மீன்பிடி சாதியான கரையார் சாதிக் குழுவுடன் தொடர்புடைய தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. உண்மையில்,வெட்டிக்காட்டில் அனைவரும் கிட்டதட்ட கரையர் சாதியினரை விட குறைந்தவர்களாக கருதப்படுகின்ற முக்குவர் எனும் உப சாதி பிரிவினரை சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். முக்குவர் சாதியானது சாதி அடுக்கமைவில் குறைந்த நிலையிலிருப்பதால் அநேகமானோர் அந்த சாதியினை ஏற்றுக்கொள்வதில்லை.

சாதி பிரிவினையானது வெட்டிக்காட்டில் காணப்படாதபோதிலும் கிராமத்தவர்கள் மத்தியில் வகுப்பு ரீதியான வேறுபாடுகளை தெளிவாக காணமுடிகின்றது. இவை தனிநபர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களின் அதிகாரம் என்பவற்றை தீர்மானிக்கின்றன. எமது கிராம வரலாற்றாசிரியர் விஜய், உதாரணமாக, கிராமத்திலுள்ள மீனவர்களுக்கு வளங்கள் மற்றும் பயிற்சிகள் போன்ற நன்மைகளை வழங்குகின்ற முதன்மை நிறுவனமான மீன்பிடிச் சங்கத்தின் செயலாளராக இருந்துள்ளார். அரசினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு மானியத்தையும் பெற்றுக்கொள்ள தகுதியானவர் யார் என்பதை தீர்மானிக்கும் அதிகாரத்தை இப்பதவி நிலையானது அவருக்கு வழங்கியது. விஜய் சன சமூக நிலையத்திலும் ஒரு குறிப்பிட்ட பதவி நிலையிலிருந்தமை குறிப்பிடத்தக்கது அத்தோடு இந்த அமைப்பானது, யுத்த காலத்தில் கிராமத்தவர்களுக்கு தேவைப்படுகின்ற பொருட்களை (பெரும்பாலும் அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற) வழங்குவதில் முக்கிய பங்கு வகித்தது. இன்றும் அதன் பங்கு தொடர்கின்றது.

அண்மைக்கால தரவு கிடைக்கவில்லை என்றாலும், [8] பல அரச அதிகாரிகளின் படி வெட்டிக்காடு சனத்தொகையில் பெரும்பான்மையானோர் குறிப்பாக 2014ல் 3990 பேர் வறுமையில் வாழ்வதாக மதிப்பிடப்பட்டது. கிராமத்திலுள்ள 835 மொத்தக் குடும்பங்களில் 130 குடும்பங்களுக்கு வீடுகள் இல்லை என்பதோடு அவர்கள் தற்காலிக கூடாரங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர் மற்றும் 70 சதவீதமான குடும்பங்கள் வேறொருவரின் வீட்டிலேயே வாழ்ந்து வருகின்றனர். 131 வீடுகளில் மின்சார வசதியில்லை,80 வீடுகளில் குடிநீர் வசதி குறைப்பாடு காணப்படுகின்றது மற்றும் 42 வீடுகளுக்கு தனிப்பட்ட கழிவறை வசதியில்லை என்பதோடு அவர்கள் அதனை அயலவர்கள் மற்றும் உறவினர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். இங்குள்ள 120 குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்களில் பெரும்பாலானோர்

[7]சமய சடங்குகள் அல்லது வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக இந்துக்களுக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கோவிலாகும்.

[8]நாங்கள் கிராமத்திற்கு சென்றிருந்த போது, வெட்டிக்காட்டின் கிராம உத்தியோகத்தர் (GN) 2015ம் ஆண்டிற்கான கிராமத்தின் மக்கள் தொகை கணக்கெடுப்பொன்றினை கொண்டு வந்திருந்தார். 2014ம் ஆண்டிற்கான தரவுகளே கிடைக்கக்கூடிய மிக சமீபத்திய தரவுகளாக இருந்ததோடு கிராம உத்தியோகத்தர் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவிடமிருந்து (DS) சேகரிக்கப்பட்டிருந்தன.

பிழைப்பிற்காக பீடி சுருட்டும் தொழிலில் ஈடுபடுகின்றனர். இங்கு சராசரி குடும்ப அளவினை விட பெரிதாக இருப்பதற்கு வெட்டிக்காட்டில் நிகழும் இளவயது திருமணமே சாத்தியமான காரணமாக அமைகின்றது. தமது அன்றாட தேவைகளை பூர்திதி செய்ய முடியாததன் காரணமாக தனது உணவுகளை கைவிடுவதாக குடும்பத்தினர்கள் எங்களிடம் தெரிவித்தனர் மற்றும் கிராமத்திலுள்ள கடையிலிருந்து கடனுக்கே உணவுப் பொருட்களை வாங்குவதாகவும் அதனை ஒருங்காக திருப்பிச் செலுத்துவதில்லை எனவும் தெரிவித்தனர்.[9]

வெட்டிக்காடானது, பிரதான பாடசாலைகள் அமைந்துள்ள உயர் சாதி கிராமங்களினால் சூழப்பட்டுள்ளது. யுத்தத்தின் காரணமாக முதல்தர மற்றும் இரண்டாம் தர பாடசாலைகளுக்கு செல்வதில் ஆபத்துகளை முகங்கொடுக்க வேண்டியிருந்ததால் வெட்டிக்காட்டிலுள்ள பிள்ளைகள் பாடசாலையை விட்டு விலகியிருந்த போதிலும் யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்களின் பின்னரும், வெட்டிக்காட்டிலுள்ள பெரும்பாலான பிள்ளைகள் பாடசாலையை விட்டு விலகியிருப்பதாக உள்ளூர் பாடசாலை நிர்வாகத்தினர் உறுதிபடுத்தினர். நிர்வாகியொருவர் பின்வருமாறு குறிப்பிட்டார் ''ஆண் பிள்ளைகள் தமது பாடசாலை விடுமுறையின் போது தமது அப்பாக்களுடன் இணைந்து மீன்பிடிக்க சென்றுவிடுகின்றனர், குறிப்பாக 'பணத்தின் சுவையை ஒருமுறை அறிந்தவுடன்' அவர்கள் மீண்டும் பாடசாலைக்கு வரத் தயங்குகின்றனர் அதேபோல் பெண்பிள்ளைகளும் பாடசாலையை விட்டு விலகி தமது அம்மாக்களுடன் இணைந்து பீடி சுருட்டும் வேலைக்கு சென்றுவிடுகின்றனர்''. இந்த கண்ணோட்டங்களானது, சாதி இயக்கவியல், சார்புநிலை மற்றும் பாரபட்சம் போன்றவற்றை வெளிச்சமிட்டு காட்டுகின்றன.

1996ல், இறுதியாக இலங்கை இராணுவத்தின் வசமாகும் வரை இக்கிராமத்தின் கட்டுப்பாடானது மாறி மாறி இரு தரப்பினராலும் கைக்கொள்ளப்பட்டிருந்தது, எனவே யுத்தம் மற்றும் குறிப்பாக இராணுவமயப்படுத்தல் மூலமாக வெட்டிக்காடு மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது எனலாம். யுத்தமானது மக்களின் இயக்கம், பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம், பௌதீக மற்றும் பொருளாதார பாதுகாப்பின்மை போன்றவற்றில் நீண்டகால விளைவினை ஏற்படுத்தியிருந்தது. யுத்த காலப்பகுதியில் மீன்பிடியில் ஏற்படுத்தப்பட்ட காட்டுப்பாடானது மீனவர்களை கடுமையாக பாதித்தது. அநேகமான மீனவர்கள் கொல்லப்பட்டு, காணாமலாக்கப்பட்டதன் விளைவாக, அவர்களின் தாய்மார்கள்கள், சகோதரர்கள், பிள்ளைகள் மற்றும் மனைவிமார்கள் நிலையான வருமானமொன்றினை பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

[9] வெட்டிக்காடிலுள்ள கடைக்காரர் ஒருவருடனான நேர்காணல் மற்றும் வெட்டிக்காடிலுள்ள ஒரு சில பெண்களுடனான நேர்காணல்.

# 4. பாதுகாப்பற்ற “உட்புறம்” மற்றும் “வெளிப்புறம்”: பெண்களின் வாழ்வாதாரத் தெரிவுகள்

## 4.1 மீன்பிடியிலிருந்து பெண்களின் தொடர்பு துண்டிக்கப்படல்

ஒரு மீன்பிடி கிராமமாக இருக்கின்ற போதிலும்,வெட்டிக்காட்டு பெண்கள் வரலாற்று ரீதியாக மீன்பிடியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர். இன்று வடக்கு மாகாணம் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பல மீனவ சமூகங்களின் மீன்பிடி நடவடிக்கைகளான, வலைகளிலிருந்து மீனை பிரித்தெடுத்தல், வலைகளை பழுதுபார்த்தல் அல்லது கருவாடு தயாரித்தல் போன்ற செயற்பாடுகளில் கூட பெண்கள் ஈடுபடாமல் முற்றிலும் விலகியுள்ளனர் (Brown, 2012; Ruwanpura, 2006; Lokuge (வரவிருக்கின்ற); Dissanayaka and Wijeyaratne, 2010).பெண்கள் மீன்பிடியிலிருந்து துண்டிக்கப்பட்டமைக்கான பிரதான காரணங்களில் ஒன்றாக கடற்கரையிலிருந்து கிராமத்திற்குள்ள தூணு, கல்பனா ராம் (1992) என்பவர் தென் இந்தியாவிலுள்ள முக்குவர் எனுமோர் சமூகத்தில் இதனை ஒத்த போக்கு காணப்படுவதாகவும், அங்கு பெண்கள்பொதுவாக தமது இளவயதில் கடல் மற்றும் கடற்கரையிலிருந்து பிரிக்கப்பட்டு வயதான (பொதுவாக திருமணம் முடித்த) பெண்களே மீன் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவதாகவும், இது சமூக ரீதியான ஒதுக்கத்தினை தூண்டுவதாக இருக்க முடியும் எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

சமூக ரீதியாகவும் மற்றும் கலாசார ரீதியாகவும் ஒரு ஆணுக்கே மீன்பிடிக்கான இடம் கட்டியமைக்கப்பட்டிருப்பதை இது தெளிவுபடுத்துகின்றது. மீனவர் சங்கத்தின் தலைவர், நாதன்* என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ‘தமிழ் கலாசாரத்தில் பெண்கள் மீன்பிடியில் ஈடுபடுவதில்லை. பெண்கள் கடற்கரைக்குச் சென்று மீனை பிரித்தெடுக்கின்ற செயற்பாடானதுஎமது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது ஒரு கண்ணியமான செயலாக (பெண்களுக்கான) கருதப்படவில்லை.’கிராம எல்லைக்குள் கூட, துறைகளில் ஆண்களே வலைகளை பழுதுபார்த்துக் கொண்டிருப்பதை எங்களால் காண முடிந்தது. நாங்கள் மேற்கொண்டு கீழே விவாதிக்க இருப்பது போல,பெண்களுக்கான சிறிய இடத்தினை ஒதுக்கி பொதுவாக ஆண் ஆக்கிரமிப்பு, ஆதிக்கம் மற்றும் போட்டித்தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு வியாபாரமாகவும் மீன்பிடியானது இருப்பதோடு,கடல், கடற்கரை மற்றும் மீன்பிடி படகுகள் அனைத்துமே ஆண்களின் சொத்து மற்றும் உரிமைகளாக இருக்கின்றன.

எவ்வாறாயினும், அனைத்து ஆண்களும் கடலுக்குச் செல்வதற்கான வாய்ப்பினையும் பெற்றிருக்கவில்லை.சக்திவாய்ந்த மற்றும் அரசியல் தொடர்புடைய ஆண்களே மீன்பிடி மூலதனங்கள், உபகரணங்கள் மற்றும் உத்தியோகப்பூர்வமான அல்லது பயிற்சிகளின் கிடைப்பனவு போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்ற மீனவர் சங்கம் போன்ற முக்கிய நிறுவனங்களில் ஆதிக்கம் செலுத்துவார்கள்.‘‘சம்மாட்டி’’ என்றழைக்கப்படும் உயர் சாதியினரே மீன்பிடிபடகுகளுக்கு உரிமையாளர்களாக இருப்பதோடு, அவர்களே வறிய மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை குத்தகைக்கு வழங்குகின்ற முக்கிய பங்குதாரர்களாக இருப்பதோடு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிடிக்கப்படுகின்ற மீன்களை கட்டுப்படுத்தல் மற்றும் தக்கவைத்துக் கொள்வதன் மூலம் மீனவர்களின் இலாபத்தை சூறையாடுபவர்களாகவும் இருக்கின்றனர்.

பெட்டி 1: இரவிப்புரம்* கடற்கரை மற்றும் மீன்சந்தை: ஒரு ஆண்மை மேலாதிக்க தளம்

மீன் வியாபாரத்தில் இருபாலரினரின் செயற்பாடுகளையும் கண்டறிவதற்கு,கிராமத்தில் தனி ஒரு பெண்ணாக இருந்து மீன் வியாபாரம் செய்கின்ற லக்ஷ்மி என்பவரை நாங்கள் கடற்கரையிலும் மற்றும் ஏல நிலையத்திலும் பின் தொடர்ந்தோம். இப்போது அவருக்கு வயது 40, மீன் வியாபாரத்தில் லக்ஷ்மியின் நுழைவானது கணவருக்கு உதவ வேண்டும் என்ற கட்டாயத்தில் ஆரம்பித்து இறுதியில் அவரது சுகயீனமுற்ற கணவருக்கு பதிலாக மீன் வியாபாரம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் விளைவாக ஏற்பட்டது.கணவருக்கு பதிலாக ஆண்களுக்கு மட்டும் சொந்தமான இடத்தில் தொழில் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது.அவர் அதைச் செய்தபோது, அவரது இடத்திற்கு பதிலாக அவரது மகள் வீட்டு வேலைகளுக்கு பொறுப்பாக இருந்ததோடு, பெண்களின் ஊழியப்படையின் சமூக இனப்பெருக்கத்தில் பொறுப்பெடுத்தார்.

இரவிப்புரம் கடற்கரை பகுதிதான் கடலிலிருந்து புதிதாக பிடித்து வரப்படுகின்ற மீன்களை ஏலமிட்டு விற்பனையாளருக்கு விற்பனை செய்கின்ற உள்ளூர் மீன் சந்தையாகும். இரவிப்புரம் கடற்கரையிலுள்ள விற்பனையாளர்கள் அடிப்படையில் வெட்டிக்காடினை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சந்தையிலுள்ள ஏனைய

உரிமையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களும் இதில் அடங்குவர். காலையில் நாங்கள் இரவிப்புரம் சென்றிருந்தபோது மீன்பிடியானது கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் தாமதமாகி இருந்ததோடு கூறியான்களும் (ஏலம் எடுப்பவர்கள்) மீனவர்கள் கடலிலிருந்து திரும்பி வருவதை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தனர். அத்துடன் விற்பனையாளர்களும் ஏலத்தினை ஆரம்பிப்பதற்கு தமது இடங்களை பாதுகாக்கும் வகையில் குழுமியிருந்தனர்.

லக்ஷ்மியை தவிர, அங்கு சமூகமளித்திருந்த ஒரே பெண் பிரியாமூ ஆவார். அவர் ஒரு விதவை என்பதோடு அவரது மருமகள் அவர் இந்த மீன்பிடி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு மறுப்பு தெரிவித்ததன் காரணமாக தனது சொந்த இடமான வெட்டிக்காட்டை விட்டு வரவேண்டிய கட்டாயம் ஏற்ப்பட்டிருந்ததாகக் கூறினார். தற்போது அவருக்கு வயது ஐம்பது. அவர் தனது மச்சான் ஒருவருடன் பக்கத்து கிராமத்தில் வசிக்கின்றார். மீன்களை பாதுகாக்கின்ற ஐஸ் பெட்டியாக பயன்படுத்தப்படுகின்ற ரெஜிபோம் பெட்டி ஒன்றினைக் கொண்டு தனது இடத்தினை பாதுகாக்க முயற்சித்ததை நாங்கள் அவதானித்தோம். ஒரு இடத்தினை பாதுகாக்க பெட்டியினை பயன்படுத்தவில்லை என்றால், மற்ற விற்பனையாளர்கள் தனது இடத்தினை கைப்பற்றக் கூடும். அத்தோடு தன்னால் அவர்களுடன் போராட முடியாது என பிரியா பிறகு எங்களிடம் கூறினார். அதனால்தான் பிரியா தனக்கான இடத்தினை உறுதி செய்து கொள்ள ஒவ்வொரு நாளும் கடற்கரைக்கு மிகவும் முன்பாக வந்துவிடுகின்றார்.

விரைவிலேயே ஆண்களனைவரும் அருகிலுள்ள கட்டடமான ஏல மண்டபத்திற்குள் விரைந்து செல்வதை நாங்கள் பார்த்தோம். லக்ஷ்மி அந்த கட்டடத்திற்குள் நுழைந்தபோது எங்களை கண்டுவிட்டார். அத்தோடு எப்படி ஏலம் நடைபெறுகின்றது என்பதை அவதானிப்பதற்கு எங்களை அழைத்துச்சென்றார். புதிதாக பிடித்து வரப்படுகின்ற மீன்களை வைப்பதற்கு, மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள சீமெந்து மேடைகளானது நீல நிற செராமிக் ஓடுகளால் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மேடையிலும் நின்றிருந்த ‘‘கூறியன்கள்’’ தமது கடினமான குரலில் ஏலத்தொகைகளை குறிப்பிட்டதும் ஒவ்வொரு மேடைகளையும் சுற்றியிருந்த விற்பனையாளர்கள் அதற்கு (எதிராக) பதிலளித்தனர். ஒவ்வொரு மூலைகளிலிருந்த ஆண்களின் முரட்டுத்தனமான சைகைகள், கடுமையான வெளிப்பாடுகளுடன் சேர்ந்த முரட்டுத்தனமான உரத்த குரல்களையும் மற்றும் ஏலத்தொகைகள் இழக்கப்பட்டபோது ஏமாற்றத்தால் கடிந்து கொண்டதையும் எங்களால் கேட்க முடிந்தது. விலைகள் தீர்மானிக்கப்படும் வரை, விரல்களால் எண்களை சமிக்ஞை காட்டிவாறே அவர்களது கைகள் எல்லா திசைகளிலும் அசைக்கப்பட்டதோடு அவர்கள் ஒரு சுழற்சி அடிப்படையில் எல்லா மூலைகளிலும் சென்று ஏலத்தினை மேற்கொண்டனர். பல்வேறுபட்ட வகைகள், வடிவங்கள், அளவுகள் மற்றும் நிறங்களில் மீன்கள் கொண்டுவரப்பட்டிருந்ததோடு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புதிதாக பிடித்து வந்து இறக்கிவைக்கப்பட்டிருந்த மீன்களை நோக்கி ஏலம் எடுப்பவர்கள் ஓடிவந்தனர்.

எமது இரண்டு மீனவர்களான லக்ஷ்மி மற்றும் பிரியா ஆகியோர் ஏலத்திற்காக தமது குரல்களை மிகவும் அரிதாகவே பயன்படுத்தினர். எனினும், லக்ஷ்மி மிகவும் அனுபவமுள்ள, முழு ஆற்றலுடையவராக காணப்பட்டார் அத்தோடு ஆண்களுடன் ஏலம் நடைபெற்ற ஒவ்வொரு மூலைக்கும் சென்றார். அரை மணி நேரத்திற்குள் அவர் ரூபா 1500.∴- பெறுமதியான மீன்களை வாங்கிக்கொண்டு மண்டபத்தினை விட்டு வெளியேறினார். பிரியா எங்களிடம், தான் மென்மையாக பேசுவதால் இந்த ஏல மண்டபத்திலுள்ள ஆண்களின் உரத்த குரல்களின் மத்தியில் அவரது குரல் கேட்காது என்பதால், கூறியான்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் தனது கைகளை உயர்த்தி ஏலத்திற்கான தமது ஆர்வத்தினை குறிப்பிடுவதாகக் கூறினார். லக்ஷ்மி பின்னர் எங்களிடம், தனது கிராமத்து உறவுகளுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.மேலும் தெரிவிக்கையில்‘அனைத்து கூறியான்களும் எமது கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதோடு ஒருவருக்கொருவர் நன்றாக தெரியும்’ என்று கூறினார். மற்றும் அவர் சந்தையிலுள்ள ஏனையவர்களிடமிருந்தும் உதவியினைப் பெற்றுக்கொள்கின்றார். சில நேரங்களில் சந்தையிலுள்ள ஏனைய ஏலம் எடுப்பவர்கள் ‘‘அக்கா, நீங்கள் ஏலத்தினை எடுத்துக் கொள்ளுங்கள்’’ என்று கூறி தமது ஏலத்தினை அவருக்கு வழங்கினர். தனது கணவர் இறந்து 16 வருடங்களாக இந்த மீன் வர்த்தகத்தில் ஈடுபட்டாலும் அது ஒரு சவாலான விஷயமும் கூட என்றும் தான் அதற்கு பழக்கப்பட்டு விட்டதாகவும்’ கூறினார்.

கடற்கரையில் இருந்த ஆண் ஆதிக்கத்தினை பிரியாவுக்கும் பிறகு எங்களுக்கும் நடந்த பாலியல் துன்புறுத்தல்கள் அப்பட்டமாக காட்சிப்படுத்தியது. ஒரு மனிதன் பிரியா அணிந்திருந்த நீண்ட நீல நிற பூக்களை கொண்ட ஆடையை இழுத்து பிரியாவை தொட ஆரம்பித்தார். அம்மனிதன் அவரை ஒரு உரத்த விளையாட்டுத்தனமான சிரிப்புடன் மீண்டும் தொட்டு, அவரது தோள்கள் மற்றும் கைகளைப் பிடித்திழுத்தான். மற்றைய ஆண்களும் இதில் சேர்ந்து கொண்டனர். மேலும் பிரியா தனது மெல்லிய உருவம் இழுத்து தள்ளப்பட்டதால் பெரும் சங்கடத்துக்கு ஆளானதோடு தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்தார்.

நாங்கள் இதனை தடுப்பதற்கு தீர்மானித்து அவரை அணுகிச்சென்று உங்களிடம் கதைக்க முடியுமா என்று கேட்ட போது அவர் அதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் எங்களுடன் வந்தபோது அங்கிருந்த ஆண்களும் சரத்தினை மடித்துக் கட்டிக்கொண்டு, தமது மணிக்கட்டு மற்றும் கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டும் அவருக்கு பின்னால் ஒரு அரைவட்ட வடிவில் பின்தொடர்ந்தனர். அந்த ஆண்களிடம், நாங்கள் பிரியாவுடன் தனியாக கதைக்க வேண்டும் எனக் கூறிய போது அவர்கள் கொஞ்சம் விலகிச் சென்றாலும் விரைவிலேயே எங்களது உரையாடலைக் கேட்பதற்கு ஒருவர் பின்னொருவராக நெருங்கி வந்ததோடு மட்டுமல்லாது பிரியாவை தொடர்ந்து துன்புறுத்தினர். நாங்கள் அவருடன் கதைக்கும்போது கூட இன்னும் சிலர் வந்து, சாயமிட்டு பனை ஓலையால் செய்யப்பட்ட அவரது பையை எடுத்து வெற்றிலையை திருட முயற்சித்தனர். பின்னால் கூடியிருந்த மனிதர்களில் ஒருவன், அவனது சாரத்தை எடுத்து மீண்டும் கட்டுவது போல் ஆனால் அதனை கட்டுவதற்கு முன் அதற்கு பதிலாக தன்னையே எங்களுக்கு அம்பலப்படுத்தும் வகையில் சரத்தை நழுவவிட்டிருந்தார்.

வெட்டிக்காட்டின் முக்குவர் இனமானது, தொழிலாளர்களின் பாலியல் பிரிப்பு, திறன்கள் மற்றும் உற்பத்தி சாதனங்களின் கட்டுப்பாடானது சமூகப்பிளவுகளுடன் ஒருவர் கையிலிருந்து இன்னொருவருக்கு சென்றடைதல் போன்ற கருத்துகளை எடுத்துக்காட்டுகின்றன (Ram, 1992). மீன்பிடியானது ஆண்களுக்கான தொழிலாக இருப்பது போல கடற்கரை மற்றும் மீன்களை சந்தைப்படுத்தும் இடம் போன்றனவும் ஆண்களுக்குரியதாகவே உள்ளதோடு பெண்கள் இதற்குள் நுழைய பல ஆபத்துக்களை எதிர்கொள்கின்றனர். கடற்கரை என்பது தனியே ஆண்களுக்கு மட்டும் சொந்தமான இடமல்ல என்பதோடு வெட்டிக்காட்டின் அல்லது குறிப்பிட்டவோர் சாதியைச் சேர்ந்த பெண்ணின் உடல் அல்லது பெண்கள் மீது ஒரு ஆணின் அதிகாரமானது இருக்க முடியாது, என நாங்கள் வாதிடுகின்றோம். வெட்டிக்காட்டிலுள்ள மிகப் பெரும்பான்மையான பெண்கள் அவர்களது வீட்டில் அல்லது அவர்களது கிராமத்திற்குள் எங்காவது மற்றும் ஒருசில பெண்கள் களத்திற்கு சென்றும் இந்த பீடி உற்பத்தி செய்யும் தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். அரச துறையின் கீழ் பணியாற்றும் ஒருசில, பெரும்பாலும் அரசாங்கத்திற்கு கீழ் தள்ளப்பட்டுள்ளவர்கள் தவிர மீதமுள்ள பெண்கள் முறைசாரா மற்றும் சுயதொழில் துறையில் ஈடுபட்டுள்ளனர். ஆபத்து நிறைந்த வேலை, ஊதியங்கள் மற்றும் குறைந்த இலாபம் என்பன மட்டுமல்லாது அவர்கள் வன்முறை தொடர்பான ஆபத்துக்களை தொடர்ந்தும் எதிர்கொள்கின்றனர்.

நாங்கள் யாழ்ப்பாண நகரில் சந்தித்த பெண் தொழிலாளர் குழுவொன்று[10] பெண்களுக்கான வேலைவாய்ப்பு குறைவாக உள்ளதாக குறிப்பிட்டனர். துணிக்கடைகள் மற்றும் மருந்தகங்களில் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்ற போதும் பெண்கள் வேறுபட்ட வகையிலான சுரண்டல்கள் மற்றும் தொல்லைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. வேலை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடுமையானதாக உள்ளன: மலசலகூடம் உள்ளிட்ட சரியான இடைவெளிகள் அல்லது வசதிகள் இல்லை ஒப்பந்தங்கள், சட்டபூர்வ நலன்புரி நன்மைகள் மற்றும் விடுமுறைகள் இல்லாத நிலை; மற்றும் குறைந்தபட்ச ஊதியங்கள் முழுமையாக அல்லது நேரத்திற்குஅநேகமாக வழங்கப்படுவதில்லை. பொதுவாக சக ஆண்களை விட தங்களுக்கு குறைவாகவே ஊதியம் வழங்கப்படுவதாக பெண் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்: ஒரே மணிநேர மற்றும் ஒரே வேலைக்கு ஆண்கள் சுமார் நாளொன்றுக்கு ரூபா 1500ஐப் பெற்றுக்கொள்கின்ற அதேவேளை பெண்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 600 என்றவொரு சிறிய தொகையே வழங்கப்படுகின்றது. வெறுமனே ஒரு சில்லறை விற்பனைத் துறையில் மாத்திரமல்லாது மருத்துவமனைகள் மற்றும் பள்ளிக்கூடங்களில் இதுபோன்ற ஊதிய இடைவளியை பொதுவாக காணக்கூடியதாக உள்ளது என பெண்கள் உரிமைகள் ஆர்வலரொருவர் குறிப்பிட்டிருந்தார். சாதி நடைமுறையானது வேலை நியமனத்தில் எழுதப்படாத ஒரு பகுதியாக உள்ளது என பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். சில துணிக்கடைகளில் கீழ் சாதியிலுள்ள ஏழைப்பெண்கள் வேலைக்கமர்த்தப்படுவதானது முதலாளிமார்களின் சுரண்டலை மேலும் அதிகரிக்கின்றது.

நல்லூர் கோவிலிலுள்ள ஒரு வேர்க்கடலை விற்பனையாளர் கோவில் திருவிழாக்களில் இரவு வேளை கடைகளில் தங்குகின்ற போது, நிறைய ஆண்கள் அவரை பாலியல் ரீதியான அணுக முற்பட்டதாக கூறினார்: ‘எனது கணவர் இறந்தாலும் கூட நான் இன்னும் இளமையாக இருப்பதாக சில ஆண்கள் என்னிடம் கூறினர். அவர்கள் எனக்கு எந்தவிதமான உணர்வுகளும் இல்லையா எனக் கேட்டனர். “ஏன் நீங்கள் மறுபடி திருமணம் செய்துகொள்ளவில்லை? நான் உங்களை திருமணம் செய்ய விரும்புகின்றேன்”.’ எனக் கேட்டதாக குறிப்பிட்டதோடு அவர் மேலும்,‘நான் காவல் துறையிடமிருந்து பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் இரவில் வந்து எனது கடையின் கதவினை மெதுவாக தட்டுவார்கள். அநேகமானோர் என்னை இரவு வேளையில் கடையில் இருக்க வேண்டாம் என அறிவுரைக் கூறினார்கள்’ எனவும் குறிப்பிட்டார். எமது நேர்காணலில், பல பெண்கள் மற்றும் பாடசாலை செல்லும் பெண்கள் பேருந்துகளில் பணம் செய்கின்ற போது அல்லது வீதிகளில் நடந்து செல்கின்ற போது அல்லது சைக்கிள் ஓட்டுகின்ற போது பாலியல் தொல்லைகளை சந்திக்கிறார்கள் எனக் குறிப்பிட்டனர் - அத்தோடு ஆண்கள் மோட்டார் சைக்கிள்களில் பெரும்பாலும் தட்டுதடுமாறி செல்வதால் வீதியில் செல்ல பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கி விட்டது எனக் குறிப்பிட்டனர். பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறைகள் தொழில்புரியும் இடத்தில் பரவலாக உள்ளது. தன்னோடு தொழில்புரியும் சக ஊழியர்கள் அல்லது மேலதிகாரிகள் இந்தப் பெண்களின் இடுப்பு, முதுகு மற்றும் மார்பு பகுதிகளை தொடுவதாகவும் ஆனால் தங்களுடைய வேலையை (அவர்கள் இருக்கும்) இழந்துவிடுவோம் என்ற பயத்தினால் அது தொடர்பில் எந்தவிதமான புகார்களையும் அவர்கள் மேற்கொள்வதில்லை’ என, ஆர்வலர் ஒருவர் கூறினார்.

[10] இந்த குழுவிலுள்ள பெண்கள் யாழ்ப்பாண நகரிலுள்ள பல்வேறுபட்ட வர்த்தகங்களில் தொழில்புரிகின்றனர்.பிரதேசத்தில் பெண்களின் வாழ்வாதாரத்திலுள்ள பொதுவான சிக்கல்களை புரிந்து கொள்வதற்காக நாங்கள் இந்தக் குழு பெண்களுடன் ஒரு இலக்கு குழு கலந்துரையாடலினை நடாத்தியிருந்தோம். இந்தக் பெண்கள் குழுவானது, ஒரு வேர்க்கடலை விற்பனையாளர், யாழ்ப்பாண நகரிலுள்ள கடைகளில் வேலை செய்கின்ற சில பெண்கள், ஒரு ஆசிரியர், அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரிகின்ற ஒரு சில பெண்கள் மற்றும் பெண்கள் உரிமைகள் குழுவிலிருந்து ஒரு சில பெண்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

உதாரணமாக, யாழ்ப்பாணத்திலுள்ள ஊனமுற்றோர் பாடசாலையின் அதிபர் ஒருவர் தன்னைத்தானே நிர்வாணமாக படமெடுத்து அந்தப் பாடசாலையில் பணிபுரியும் பெண்களுக்கு அதனைக் காட்டியுள்ளார், இந்த வழக்கானது தற்போது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. என்பதைக் குறிப்பிட்டார்.

இச்சம்பவங்களானது சாதி, வகுப்பு மற்றும் பாலின ரீதியான அடக்குமுறைகள் போன்றன இணைந்து, ஆண் ஆதிக்கம் மற்றும் அன்றாட பெண்களுக்கு எதிரான வன்முறைகள் போன்றவற்றால் ஆழ்ந்துள்ள ஒரு பாலியல் அரசியல் பொருளாதாரத்தை உருவாக்குகின்றன. வர்த்தகம் மற்றும் சந்தைகள், கிராமப்புற மீன் வர்த்தகம் அல்லது நகர்ப்புற முறைசாராத் துறை போன்றன ஆணாதிக்கம் மற்றும் அவர்களுடைய பாலுறவு, பொருளாதார மற்றும் இடம் சார்ந்த கட்டுப்பாடு,மற்றும் ‘வெளிப்புறத்தில்’ பெண்களுக்கு அபாயத்தினை அளிக்கின்ற‘மேலாதிக்க ஆண்மை’ (Connell, 2005),‘ஆண்மைச் செயல்கள்’ (Schrock and Schwalbe, 2009) போன்றவற்றின் செயற்பாடுகளுக்கான தளங்களாகும். மிகவும் துல்லியமாக இத்தகைய செயற்பாடுகளானது,‘உட்புறத்தில்’ பீடிகள் தயாரிப்பில் ஈடுபடுவதற்கான உள்ளுணர்வினை உருவாக்கிவிடுகின்றது அதாவது, வீட்டுக்குள் அல்லது கிராமத்துக்குள் தொழிலில் ஈடுபடுவதே ‘மிகவும் பாதுகாப்பான வாழ்வாதார வடிவம்’எனக் கருதப்படுகின்றது.இதனை ‘உட்புறத்தின்’ யதார்த்தங்களாக தற்போது நாம் பார்க்கின்றோம்.

# 5. பீடி மற்றும் வன்முறை திரட்சியின் போக்கு

வெட்டிக்காட்டின் பீடித்தொழிலானது பெருமளவு வீட்டினை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது; ஏனெனில், பெண்கள் தமது வழக்கமான வீட்டு செயற்பாடுகள் மற்றும் கரிசனையுள்ள செயற்பாடுகளை செய்துகொண்டே பீடி உருட்டும் தொழிலில் ஈடுபடுகின்றனர். இது மிகக் குறைவான இடவசதியையே கோருகின்றது, கிட்டதட்ட எந்தவிதமான மூலதனச் செலவீடும் இல்லை மற்றும் ஒப்பீட்டளவில் எளிதான திறமையே கையாளப்படுகின்றது அத்தோடு பிரவேசத் தடைகள் மிகக் குறைவாக இருக்கின்றது. குடும்ப வருமனம், குறிப்பாக தொழிலற்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குடும்பங்களுக்கு இவ்வூதியமானது முக்கிய ஒரு துணையாக உள்ளது. எனவேதான், பீடி உருட்டுதல் வெட்டிக்காட்டு பெண்களின் வருமானம் உழைக்கும் அடிப்படை மூலமாக மாறிவிட்டது மற்றும் பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் செயலாளரின் கருத்துப்படி, தற்போது கிராமத்திலுள்ள கிட்டதட்ட 90 சதவீதமான பெண்கள் இந்த பீடி உருட்டும் தொழிலிலேயேஈடுபட்டுள்ளனர்.

## 5.1 பீடி கைத்தொழில்

இலங்கையின் பீடிக் கைத்தொழிலானது மிகவும் குறைந்தளவில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுளளது. பீடி பெருக்கத்திற்கான காரணம், - மற்றும் சிலோன் டொபேக்கோ கம்பனி போன்ற புகையிலை உற்பத்தியில் ஜாம்பவான்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள் போன்ற தகவல்களுடன் அதன் விற்பனையின்[11] - நாட்டில் பெரும்பாலும் புகையிலையினை பயன்படுத்துகின்றஉழைக்கும் வர்க்கம் மற்றும் வறியவர்கள் காரணமாக- உடனடி வளர்ச்சியின் அளவினை உள்ளடக்கிய புள்ளிவிபரங்கள்கிடைக்கக்கூடியதாக உள்ளன ஆனால் எந்த நிபந்தனைகளின் கீழ் இத்தொழில் விருத்தி அடைகின்றது, குறிப்பாக தொழிலாளர்களின் கண்ணோட்டம் போன்றவற்றினை உள்ளடக்கிய இல்கியங்கள் கிடைக்கப்பெறுவதில்லை. சிகரெட்டுக்கு பதில் மிக மலிவான மாற்றீடாக ஏழைகளின் மத்தியில் இதன் சந்தை பங்கானது அதிகரிப்பதோடு இக்கைத்தொழிலானது அதிக இலாபத்தினை நம்பியுள்ளது, இதன்மூலம் பீடி கைத்தொழிலானது விரிவாக்கபட்டுள்ளது எனலாம். எவ்வாறாயினும், இப்பீடி மதிப்புச் சங்கிலியானது அதீத இலாபம் மற்றும் சுரண்டல் மூலமான திரட்சியையும் உருவாக்குகின்றது.

## 5.2 வெட்டிக்காட்டில் மூலப்பொருட்களிலிருந்து பீடிக் குச்சிகளை பெற்றுக்கொள்ளல்

யாழ்ப்பாணத்தின் நல்லூரிலுள்ள 'பாரதி'*நிறுவனமே உள்ளூர் பீடி கைத்தொழிலில் மிகப்பெரிய ஒரு நிறுவனமாகக் காணப்படுகின்றது. கொழும்பிலுள்ள இதன் தலைமை நிறுவனமானது,பீடி உற்பத்திக்கு தேவைப்படுகின்ற இரண்டு முக்கிய மூலப்பொருட்களான டெண்டு இலைகள்[12] மற்றும் புகையிலைகளை இந்தியாவிலுள்ள ஒரிஸ்ஸாவிலிருந்து இறக்குமதி செய்து, யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனத்தின் பிரதான நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. ஒரு தனித்துவமான சுவையினைப் பெற்றுக்கொள்வதற்கு,வட மாகாணத்திலுள்ள உள்ளூர் புகையிலையோடு இந்தியாவின் புகையிலையும் கலக்கப்படுகின்றது.

டெண்டு இலைகள் சேர்த்து புகையிலைகள் கலக்கப்படுவதோடு சிறிய நூலினைக் கொண்டு பீடி குச்சிகள் கட்டப்பட்டு பின் கிராமத்திற்கு மற்றும் இடைத்தரகர்கள் மூலம் கிராமத்தின் பீடி நிறுவனமொன்றிக்கு, சிறிய மற்றும் முறைசாரா அமைப்பொன்றாக செயற்படுகின்ற ஒருவர் வீட்டிற்கும் அனுப்பி வைக்கப்படுவதோடு, கிராமத்திலிருந்து இடைத்தரகரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் மேற்பார்வை செய்யப்படும். இதுசேமிப்பிற்கான மேலும் மூலப்பொருட்களை விநியோகம் செய்வதற்கான உள்ளூர் கேந்திர நிலையமாக செயற்படுகின்றது மற்றும் மேற்பார்வையாளரால் சுருட்டப்பட்ட பீடிகள் மற்றும் கொடுப்பனவுகள் போன்றன சேகரிக்கப்படுகின்றன.

பீடி சுருட்டுதலானது ஒரு ஊழியச் செறிவான உற்பத்தி முறையாக காணப்படுகின்றது, ஆனால் வீட்டினை அடிப்படையாகக் கொண்டு பீடி உற்பத்தியில் ஈடுபடுபவ்களுக்கு இந்த நல்லூரிலுள்ள பாரதி பீடி நிறுவனத்துடன் எந்தவிதமான நேரடித் தொடர்பும் இல்லை. வெட்டிக்காட்டில் செய்யப்படுகின்ற பீடி பாரதிநிறுவனத்தால்செய்யப்படுகின்றது என்பதற்கு சான்றாக கலால் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட

[11] 2007 மற்றும் 2014ம் ஆண்டுகளுக்கிடையில், பீடி உற்பத்தியானது கிட்டதட்ட 200மூ மாக அதிகரித்தள்ளமையை காணமுடிகின்றது (இலங்கை சுங்க திணைக்களம் 2015, தம்பவின்ன, 2014).

[12]டெண்டு இலைகள் பீடிக் குச்சிகளை சுற்றி வெளியில் மூடப்பட்டிருக்கும்.

உரிமத்தின் [13] நகலை கிராமிய மட்ட பீடி நிறுவனங்களுக்கு பொறுப்பான மேற்பார்வையாளர்கள் வைத்திருப்பர்.

வெட்டிக்காட்டிற்கும் பாரதி கம்பனிக்குமான இடைத்தரகர் பாலன் என்பவராவார், இவரது செயற்பாடுகள் பக்கத்து கிராமமான 'கோட்டாலியை'அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. வெட்டிக்காட்டிலுள்ள ஐந்து கிராம மட்ட நிறுவனங்கள் மூலப்பொருட்களை பங்கிடுவதை மேற்பார்வை செய்வதோடு பீடிகளை சேகரித்து பொதி செய்தல் மற்றும் பீடி சுருட்டுபவர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதே அவரின் வேலைகளாகும். ஒவ்வொரு பெண்களுக்கும் கொடுக்கப்படுகின்ற மூலப்பொருட்களின அளவானது அவர்களின் வேகம், திறமை மற்றும் பீடி சுருட்டுவதற்கு கிடைக்கின்ற நேரம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுவதாக மேற்பார்வையாளர் ஒருவர் குறிப்பிட்டார். பெண்களனைவரும் தனக்கு வழங்கப்பட்ட மூலப்பொருட்கள் முடிவடைந்ததும்,தாங்கள் செய்து முடித்த பீடி கட்டுக்களை அல்லது அரைக் கட்டுக்களை[14] வட்டியினுள் (வட்ட வடிவில் நெய்யப்பட்ட ஒரு சிறிய தட்டு) இட்டு கிராம மட்ட நிறுவனங்களுக்குச் சென்று கையளித்துவிட்டு, தாங்கள் செய்து முடித்த பீடி கட்டுக்களின் எண்ணிக்கையை மேற்பார்வையாளர் அவர்களது தனிப்பட்ட அட்டைகளில் குறிக்கும் வரை காத்திருப்பர். ஆவணப்படுத்துதல் நிறைவடைந்ததும், அவர்களுக்கு இன்னும் பீடிகள் உற்பத்தி செய்வதற்கு தேவையான டெண்டு இலைகள் மற்றும் புகையிலைகள் வழங்கப்படும். ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் செய்து முடிக்கப்பட்ட பீடிக்களின் எண்ணிக்கைகள் கணிப்பிடப்பட்டு அதற்கேற்ப கொடுப்பனவுகள் வழங்கப்படும். சுருட்டப்பட்ட ஒவ்வொரு பீடி குச்சிகளும் ரூபா 50 சதத்தை ஈட்டித்தருகின்றது அத்தோடு இதன் சந்தைப் பெறுமதியானது, ஒரு குச்சிக்கு ரூபா 2.41 ஆகும் (12 குச்சிகளை கொண்ட ஒரு கட்டின் விலை ரூபா 29).[15]

மேற்பார்வையாளரால் சுருட்டப்பட்ட பீடி கட்டுகள் சேகரிக்கப்படாது அல்லது மூலப்பொருட்கள் பங்கிடப்படாமல் இருக்குமாயின், அவர்கள் முடிக்கப்பட்ட பீடி கட்டுக்களை ஒரு நீண்ட செவ்வக வடிவிலான தட்டில் அடுக்கி வைத்திருப்பார்கள். அவர்கள் பீடிக்களை எவ்வளவு இறுக்கமாக கட்டியுள்ளனர் என்பதைப் பொறுத்து ஒவ்வொரு தட்டும் 6000 இலிருந்து 6500க்கு இடைப்பட்ட பீடிக்களை கொண்டிருக்கும். எமது இரண்டு மணிநேர கள பயணத்தின் போது,மேற்பார்வையாளர் ஒருவர் தன்னால் சேகரிக்கப்பட்ட பீடிக் கட்டுக்களை மூன்று தட்டுகளில் நிரப்பிய பார்த்ததும் வெட்டிக்காட்டின் பீடி உற்பத்தியின் அளவு வெளிப்படையாகத் தெரிந்தது. ஒவ்வொரு நாளும் பாலன் அல்லது அவரது உதவியாளர்களில் ஒருவர் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள நிறுவனங்களுக்கு வந்து சுருட்டப்பட்ட பீடி கட்டுக்களை சேகரிப்பதோடு மூலப்பொருட்களின் கையிருப்புக்களை மீள் நிரப்பீடு செய்வர்.

கிராமத்து நிறுவனங்களிடமிருந்து பீடிக்கள் சேகரிக்கப்பட்ட பின், கோட்டாலியிலுள்ள பாலனிடம் கொண்டு சேர்க்கப்படும். அவர்கள் எவ்வளவு உற்பத்தி செய்கிறார்கள் என்ற அடிப்படையில் பீடி சுருட்டுபவர்களுக்கு வழங்கப்படுவது போல் இல்லாமல், கோட்டாலியிலுள்ள தொழிலாளர்கள் மாதச் சம்பளத்தினையே பெற்றுக்கொள்கின்றனர். எவ்வாறாயினும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கிடையில் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகின்றது. ஒரு ஆணுக்கு மாதமொன்றிக்கு ரூபா 20000 செலுத்தப்படுகின்ற அதேவேளை ஒரு பெண்ணுக்கு ரூபா10000 இலிருந்து ரூபா 12000 வரையிலேயே மாதமொன்றுக்கு ஊதியமாக வழங்கப்படுகின்றது. 'ஆண்களுக்கு குடும்பங்கள் இருப்பதோடு பெண்கள் ஆண்களையே சார்ந்துள்ளனர் எனவே, ஆண்களை விட அவர்களுக்கு அதிக பணம் தேவையில்லை' என்ற பாலனின் கருத்துப்படி, இந்த ஊதிய வேறுபாட்டினை நியாயப்படுத்துகின்றார். அது மட்டுமல்லாமல், ஆண்கள் பல பணிகளை செய்யும் பொருட்டு மோட்டார் சைக்கிள்களில் பல இடங்களை சுற்றி வருகின்றனர் ஆனால் இதனை பெண்களால் கையாள முடியாது…அவர்கள் ஆண்கள் செய்வது போன்ற வேலைகளை செய்வார்கள் எனின், அவர்களால் அதிக கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர் மேலும்,பெண்கள் வேலைக்கு வரமுடியாத போது தான் அவர்களை தண்டிப்பதில்லை அதாவது 'பெரும்பாலான பெண்கள் ஒரு மாதத்தில் தமது மாதவிடாய் காலங்களில் மூன்று நாட்கள் வேலைக்கு சமூகமளிப்பது இல்லை ஆனால் நான் அவர்களின் சம்பளத்திலிருந்து எதையும் கழிப்பதில்லை' என்று அவர் கூறுவதன் மூலம், அவர் தனது வெளிப்படையான கருணை அடிப்படையில் ஊதிய வேறுபாட்டினை நியாயப்படுத்துகின்றார்.

[13] கலாள் வரி திணைக்களத்திடமிருந்து பெறப்படுகின்ற இந்த உரிமமானது, வெட்டிக்காடில் புகையிலைகளை சேமித்து வைப்பதற்கும் மற்றும் பீடியினை உற்பத்தி செய்வதற்குமான அனுமதியை வழங்குகின்றது.

[14] 24 பீடிகளை இணைத்து கட்டப்பட்ட ஒரு பொதியே ஒரு கட்டு மற்றும் 12 பீடிகளை கொண்ட அரைப் பொதியே அரைக் கட்டு எனப்படுகின்றது். உற்பத்தி செய்யப்படுகின்ற பீடிக்களின் எண்ணிக்கையை கணிப்பிடுவதற்குபீடி கைத்தொழிலில் பயன்டுத்தப்படுகின்ற ஒரு சொல்லாக இது இருக்கின்றது.

[15] நாங்கள் வெளிக்கள வேலையினை/தரவு சேகரிப்பினை மேற்கொண்டபோது இதுவே விலையாக இருந்தது.

பீடிப் பொதிகள் நல்லூர் நிறுவனத்தினை வந்தடைந்த பின், செய்தித்தாளினால் சுற்றப்பட்ட பீடிக்கள் நீக்கப்பட்டு மீண்டுமொரு தடவை பீடிக்கள் தட்டுக்களில் அடுக்கப்படுவதோடு மேலும் அவற்றினை உலர்த்துவதற்கு தேங்காய் சிரட்டைகளை பயன்படுத்தி தீயில் வாட்டுகின்ற முறை கையாளப்படுகின்றது. இந்த முறையானது பாரதி பீடிக்களுக்கு ஒரு தனிப்பட்ட சுவை மற்றும் மணத்தினை வழங்குகின்றது. பீடிக்கள் தீயினால் வாட்டப்பட்டதும், அவை தொழிற்சாலையின் தரையில் கொட்டப்படுகின்றன அத்தோடு கொட்டப்பட்ட பீடி குவியல்களை சுற்றி வீட்டில் தயாரிக்கப்பட்ட பசையினை ஒரு கிண்ணத்தில் வைத்துக்கொண்டு சுமார் 20 பெண்கள் அமர்ந்திருப்பார்கள். நிறுவனத்தின் பெயர், உற்பத்தி மற்றும் காலாவதி திகதி, விற்பனை விலை (இலங்கை ரூபா 29) மற்றும் புகைத்தலால் ஏற்படுகின்ற ஆபத்தினை காட்டுகின்ற ஒரு உருவத்தினையும் உள்ளடக்கிய விவரச் சீட்டுக்களை ஒவ்வாரு பீடி கட்டுகளை சுற்றி ஒட்டுவதே இப்பெண்களுக்கு பணிக்கப்பட்ட வேலையாகும். இப்பெண்கள் ஒரு இடைவெளி இல்லாத வேகத்தில் தங்களால் முடிந்தவரை பல பீடி கட்டுகளை சுற்றி விவரச் சீட்டுக்களை ஒட்டுகின்றனர். அவர்களின் வேலைகளை நிறுத்திவிட்டு அவர்களுடன் பேசுவதினால் அவர்களுக்கு உயர்ந்த அமையச்செலவு ஏற்படும் என்பது எங்களுக்கு தெளிவாக தெரிந்திருந்தது. நிறுவனத்தின் முகாமையாளர் எங்களுக்கு நிறுவனத்தினை சுட்டிக்காட்டியதோடு, பெண்கள் ஒரு மணித்தியாலத்தில் பொதி செய்கின்ற பீடிக் கட்டுக்களுக்கேற்பவே அவர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என்பதை குறிப்பிட்டார். அவர்களுக்கு சராசரியாக வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் தொடர்பில் எங்களுக்கு தெரிவிக்காவிட்டாலும் அவர்கள் வேலை வேகத்திற்கேற்ப அதிகம் இல்லை என்பதை அனுமானித்துக் கொள்ளலாம். அதேபோல கிராமத்தில் பெண்களின் உழைப்பானது அவர்களால் சுருட்டப்படுகின்ற பீடிக்களின் எண்ணிக்கையில் தங்கியிருப்பதால், எந்த இடைவெளியுமில்லாமல் வேகமாக வேலையினை செய்வதைக் காணமுடிகின்றது. பெயரிடப்பட்ட பீடி கட்டுக்கள் நிறுவனத்தின் வேறொரு பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன அங்கு இரண்டு ஆண்கள் ஒருவருக்கொருவர் அருகில் அமர்ந்து, 480 பீடி குச்சிகள் அல்லது 40 பீடி கட்டுக்களை ஒரு செவ்வக வடிவிலான பெட்டியினுள் பீடிக்களைப் பொதியிடுகின்றனர். இப்பொதிகள் வட மாகாணம் முழுவதும் மறுவிற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## 5.3 பீடி உருட்டல்: நோயுற்ற சுயவேலைவாய்ப்பு

ஆபத்தான வேலை நிலைமைகள், உடல் நலக் கோளாறுகள் மற்றும் சுரண்டல்கள் என்பன பீடி வர்த்தகத்தில் பொதுவாக காணக்கூடியதாக உள்ளன (தேசிய பெண்களுக்கான ஆணைக்குழு, 2005). பீடி உருட்டல் மற்றும் பொதி செய்கின்ற போது தொடர்ந்து வெளிப்படுகின்ற புகையிலை தூசிகள் மற்றும் தீப்பொறிகளால் குறிப்பாக அவர்களின் உடல்நலம் பாதிக்கப்படுகின்றது. இந்தியாவின் ஒரு விரிவான ஆவணமானது காசநோய், காளான் தொற்று, புற்றுநோய், தோல் நோய்கள் மற்றும் ஏனைய புகார்கள் போன்றவற்றினை அதிகரிக்கச் செய்கின்ற உட்கார்ந்த நிலையில் வேலை செய்தல்,சுகாதாரமற்ற தொழில் நிலைமைகள், புகையிலையின் தொடர்ச்சியான வெளிப்பாடு போன்றவற்றோடு தொடர்புடைய பல உடல்நலக் கோளாறுகளுக்கு சான்றாக அமைகின்றது (தேசிய பெண்களுக்கான ஆணைக்குழு, 2005).

பெரும்பாலான பெண்கள் போதியளவு காற்றோட்டமில்லாத மற்றும் முறையற்ற விளக்குகளைக் கொண்ட ஒரு மூடப்பட்ட சூழ்நிலையிலேயே வேலை செய்கின்றனர். தொடர்ச்சியாக பீடி உருட்டும் செயற்பாட்டினால் தோலினூடாக நிக்கோட்டின் நேரடியாக உறிஞ்சப்படுவதோடு வீட்டில் மேற்கொள்ளப்படும் இந்த பீடி உற்பத்தியானது முக்கியமாக குழந்தைகளை பாதிப்பதாக அமைகின்றது ஏனெனில் அவர்கள் வாழ்கின்ற, சாப்பிடுகின்ற மற்றும் தூங்குகின்ற இடத்திற்கு அருகிலேயே இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது (நக்கீரன் மற்றும் புகழேந்தி, 2010). கிராமத்திலுள்ள இரண்டு மேற்பார்வையாளர்கள் இலைகள் மற்றும் புகையிலைத் தூளினை அளவிடுவதோடு அவர்களின் பணி தொடர்புபடுகின்ற போதும்தூசிகள் வெளிப்படுத்தப்படுதை தவிர்க்க முடியாது என எங்களிடம் குற்றம் சாட்டினார். அவர்கள் இருவருக்கும் சுவாசம் மற்றும் இருதயப் பிரச்சினைகள் இருந்ததோடு அவர்கள் மருத்துவ சிகிச்சையை பெற்றுவருகின்ற போதும், அவர்கள் தமது வேலைகளை தமது நோய்களுடன் இணைத்துப் பார்க்கவில்லை.

நீண்ட காலத்திற்கு ஒரே நிலையில் அமர்ந்து மற்றும் அதிகளவு விரல்களை பயன்படுத்துகின்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய உடல் ரீதியாக கஷ்டத்தினை தருகின்ற வேலைகளானது தலை, கழுத்து, கால் மற்றும் முதுகு வலிகளையும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் வாதம் போன்ற பல உடல்நல பிரச்சினைகளை ஏற்படுத்தும் (தர்மலிங்கம், 1993ம் ஆண்டு மேற்கோளிட்டு காட்டியது ரஸ்டாகி மற்றும் பலர்.,2001). வெட்டிக்காட்டில் நாங்கள் பேசிய பெண்களும் இது போன்ற உடல்நலப் பிரச்சினைகளை குறிப்பிட்டனர் அதாவது, அவர்களில் இருவர் வாத நோய் காரணமாக மாதத்திற்கு ஒரு முறை தமது கால்களுக்கு ஊசி போடவேண்டியுள்ளதாக குறிப்பிட்டதோடு ஒவ்வொருவருக்கும் ரூபா 150 செலவு ஏற்படுவதாக குறிப்பிட்டனர்.

பீடி உற்பத்தியில் ஈடுபடுகின்ற பெண்கள் தமது இலக்கினை அடைந்து கொளள்வதற்காக தொடர்ந்து அழுத்தங்களுக்கு உட்படுவதோடு பெண்கள் மத்தியில் இறுக்கமானது உயர் நிலையில் இருப்பதாக ஏனைய ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன (Gopal, 1997; 1999 cited in Rustagi et al., 2001). அவர்களது வறுமை, பலவீனமான அரசியலமைப்பு, போதிய ஓய்வின்மை, முடிவற்ற வேலை மற்றும் சிறந் உணவு பழக்கமின்மை போன்றன அனைத்தும் இரத்தச்சோகை மற்றும் ஊட்டச்சத்தின்மை போன்ற நோய்களால் சுலபமாக பாதிக்கப்படுவதற்கான காரணங்களாகின்றன (Rustagi et. al., 2001).

இத்தகைய உடல்நலக் கோளாறுகள் இறுக்கின்ற போதிலும் நிறுவனங்கள் அல்லது இடைத்தரகர்களால் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான முகத்திரைகள் மற்றும் கையுறைகள் போன்றன வழங்கப்படுவதில்லை. சில தொழிலாளர்கள் தமது மூக்கு மற்றும் வாயினை மூடிக்கொள்ள வேண்டியதன் அவசியத்தினை அறிந்து ஒரு சிறிய துணிக் கொண்டு மூடியிருந்தாலும், அசௌகரியத்தினை ஏற்படுத்துவதன் காரணமாக அவர்களால் அதனை தொடர்ந்து செய்ய முடியாதுள்ளது. 17 வயதினையுடைய இளம் பீடித் தொழிலாளி எங்களிடம் பின்வருமாறு கூறினார் அதாவது, அவள் மற்றும் அவளது சக ஊழியரும் அவர்களுக்கான முகத்திரைகள் கொடுக்கப்பட்டாலும் கூட அணிவதில்லை ஏனெனில் அவ்வாறு முகத்திரை அணிவதால் அது ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதினை தடை செய்வதோடு இதன் காரணமாக அவர்கள் ‘தூங்க ஆரம்பித்து’ விடுவதாக குறிப்பிட்டார்.

வெட்டிக்காட்டில் மேற்கொள்ளப்படுகின்ற பீடி உருட்டும் தொழிலானது, அதனோடு சம்பந்தப்பட்ட பெண்களுக்கு படிப்படியாக விஷத்தன்மையை உருவாக்குகின்ற அதேவேளை குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஏனையோரும் கூட நோயின் பாதிப்பினை சந்திப்பதற்கு ஆளாக வேண்டியுள்ளது. இதன் விளைவாக, இத்தொழிலானது பீடி உருட்டுபவர்கள் மற்றும் அதன் நுகர்வோரை இணைத்து கட்டிவிடுவதோடு அவர்கள் இருவரும் உயிரற்ற அரசியல் பொருளாதாரத்திலுள்ள ஏழை தொழிலாளர் வர்க்கத்தினை சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். ஆனால் அதன் பாலின இயல்புகள், அது வடிவமைக்கப்படுகின்ற அகநிலைகள் மற்றும் அதனை இன்றியமையாததாக்குகின்ற வன்முறைகள் போன்றவற்றினை புரிந்து கொள்வதற்கு,வெட்டிக்காட்டில் பீடி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெண்களின் வாழ்க்கையினை மிக விரிவாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

# 6. வெட்டிக்காட்டில் பீடி உருட்டுபவர்களின் வாழ்க்கை நிலை

வெட்டிக்காட்டினை சேர்ந்த சரோஜினி,*கீதாஞ்சலி* மற்றும் ஆனந்தி* ஆகிய மூன்று பெண்களும் பீடி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். முதலிரு பெண்களும் பீடி சுருட்டுபவர்களாகவும் மூன்றாவது பெண் ஒரு சிறிய கிராம மட்டத்திலான பீடி நிறுவனத்தின் ஒரு மேற்பார்வையாளரும் ஆவார்கள். யுத்தம், வறுமை, சாதி மற்றும் பாலியல் ஒடுக்குமுறை போன்ற பரந்துபட்ட சூழ்நிலைகளில் அமைந்த அவர்களது வாழ்க்கை அனுபவங்களானது, எவ்வாறு சமூகப் பொருளாதார கட்டமைப்பு மற்றும் அதன் செயன்முறைகளினூடாக வன்முறைகள் உற்பத்தி மற்றும் மீள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை அடிகோடிட்டுக் காட்டுகின்றன.

சரோஜினி பீடி உருட்ட ஆரம்பித்து 27 வருடங்கள் கடந்து விட்டன. அவருக்கு 10 சகோதரர்கள், அவரது அம்மா இல்லத்தரசி மற்றும் அப்பா ஒரு மீனவர். அவரது குடும்பத்திற்கு ஆதவளிக்கும் வகையில், அவர் தனது பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தி விட்டு தனது 10வது வயதில் இந்த பீடி உருட்டும் தொழிலை ஆரம்பித்தார். சரோஜினி இளவயதில் இருந்தபோது, அவரும் அவரது குடும்பமும் பசியின் கொடுமையை நன்கு அறிந்திருந்தனர், சில நேரங்களில் மாலை வேளைகளில் மட்டுமே உணவினை உட்கொண்டனர். பீடி உருட்டும் தொழிலுக்கு செல்லும் முன் தனது இளவயதில் சரோஜினி, பல நாட்கள் வெறும் தண்ணீரை மாத்திரம் குடித்து பசியினை தணிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்.

50 வயதான கீதாஞ்சலி, கிராமத்திலுள்ள ஒரு பீடி நிறுவனத்தில் மேற்பார்வையாளராக இருக்கின்றார். கீதாஞ்சலியின் தந்தை ஒரு வறிய மீனவர் அத்தோடு ஒரு குடிகாரர், தனக்கு 13 வயது இருக்கும் போதே ஒரு குறிப்பிட்ட குடும்ப பொறுப்புகளை இவரிடம் ஒப்படைத்து விட்டு அவரது தந்தை இறந்துவிட்டதிலிருந்து வாழ்வாதாரத்திற்காக இப்பீடி உருட்டும் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தார். இவர் பீடி உருட்டுவது தொடர்பான திறனை 80 வயதினையுடைய பீடி உருட்டும் தொழிலில் ஈடுபடுகின்ற ஆனந்தி அம்மாவினைப் பார்த்துக் கற்றுக்கொண்டார் அத்தோடு ஆனந்தி அம்மா வறுமையின் கொடுமை காரணமாக தனது இளவயதில் இருக்கும் போதே இவ்பீடி உருட்டும் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தார். ஆனந்தி அம்மாவின் மகன் ஒரு மீனவர், அவரே குடும்பத்தின் பிரதான வருமானம் உழைப்பவராக இருந்தார். அவரது மகனை விடுதலை புலிகளின் உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் 1996 டிசம்பர் மாதம் ஒரு இரவில் இராணுவத்தினரில் அழைத்துச் செல்லப்பட்டார். பல ஆண்டுகளாக, பல்வேறுபட்ட அதிகாரிகளிடம் பல கடிதங்கள் மற்றும் மனுக்கள் எழுதி கொடுத்தும் இன்னும் அவரது மகன் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கப்பெறவில்லை. அவரது மகன் சென்ற பின் குடும்பச் சுமையானது மீண்டும் வயதான ஆனந்தி அம்மாவின் தோள்களில் வழுந்தது. ஆனந்தி அம்மாவின் மற்றொரு மகனுக்கு காது கேட்காது அத்தோடு வாய் பேச முடியாதவராக இருக்கின்ற போது அவரது கணவருக்கும் வயதாகிவிட்டதால் தளர்வடைந்துவிட்டார். திருமணம் முடித்துவிட்ட அவரது மகளுடைய குடும்பமும் கூட கடுமையான நிதிச் சிக்கலில் இருப்பதால் ஆனந்தி அம்மா அவர்களுக்க கொஞ்சம் ஆதரவாக உள்ளார். அவரது நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில், பொது மருத்துவமனையொன்றில் அவரது கண்ணுக்கு சத்திர சிகிச்சை செய்த போது சிகிச்சை தவறுதலாக செய்யப்பட்டதால் அவர் தனது ஒரு கண் பார்வையை இழந்துவிட்டார்.

மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றாமல் தொடர்ந்து பீடி வர்த்தகத்தில் ஈடுபட்டதால், கீதாஞ்சலி இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் வைத்தியசாலையிலிருந்து தனக்கான எக்ஸ்ரே படத்தினை பெற்றுக்கொள்வதற்கு காத்திருக்கின்ற போதிலும், அவரது வாழ்க்கை மற்றும் மருத்துவ செலவினை ஈடுசெய்வதற்காக வேலைக்குச் சென்று உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார். இலவச மருத்துவ வசதி இருக்கின்ற போதிலும், மருத்துவமனையில் அவருக்குத் தேவையான மருந்துகள் அரிதாகவே போதுமான அளவு வழங்கப்படுவதால்,கீதாஞ்சலி ஒவ்வொரு மாதமும் ஒரு கணிசமான அளவு பணத்தினை செலவிட வேண்டியுள்ளது. அவர் தொடர்ந்து நீண்ட நேரம் வேலை செய்கின்ற போது அடிக்கடி ஓரளவு மயக்கம் மற்றும் மூச்சுத் திணறலை உணர்கின்றார். புகையிலைத் தூசி மற்றும் பீடி உற்பத்தியில் உட்கார்ந்தே வேலை செய்கின்றமை மட்டுமே அவரது நிலையை மோசமாக்கியுள்ளது என்றாலும்,அவருக்கு வேறு வழியில்லை. அவர் வேலை செய்கின்ற போது உடல்நிலை மோசமாவதை உணர்ந்தால் சுவரில் சாய்ந்தபடி தரையில் அமர்ந்து விடுவார் ஆனால் சிறிது நேரத்தின் பின் மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்து விடுவார்.

சரோஜினியின் கணவரின் கால் காயமடைந்ததன் காரணமாக அவரால் ஒருங்காக வேலையில் ஈடுபட முடியாது. அவரால் முடியும் போது ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடுகின்ற ஒரு மீன்பிடி படகில் கூலி வேலைக்காகச் செல்வார், ஆனால் அவரது காயமானது, உடலை வருத்தி அல்லது நீண்ட காலம் செய்யக்கூடிய வேலையில் அவரை ஈடுபட விடமால் தடுக்கின்றது. அவரது கணவர் சுகயீனம் மற்றும்

வேலை செய்ய முடியாமல் இருக்கின்ற நாட்களில் சரோஜினி, அவர்களுக்கான உணவின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் செலவீனங்களை குறைக்கும் முயற்சியில் ஈடுபடுவார்.

எனவே,சரோஜினி ஒரு இல்லத்தரசியாக இருப்பதோடு மேலதிகமாக வருமானம் உழைப்பவராகவும் காணப்படுகின்றார். பீடி உருட்டும் தொழிலினை தவிர்த்து, அருகிலுள்ள பாடசாலைக்கு மதிய உணவு சமைத்துக் கொடுப்பதோடு காலை உணவினையும் சமைத்து வழங்குகின்றார். நாளொன்றுக்கு பல மணித்தியாலங்கள் என மாதம் முழுவதும் அவர் தொடர்ந்து வேலை செய்வாரானால்,அவரால் மாதமொன்றுக்கு இலங்கை ரூபாயின் படி 15000 வரையிலும் அதனோடு இணைந்து காலை உணவினை சமைத்து வழங்குவதன் மூலம் நாளொன்றுக்கு ரூபா 300ஐயும் உழைக்க முடியும். அத்தோடு அவர் பள்ளியில் மதிய உணவு சமைத்துக் கொடுப்பதால் பாடசாலையிலிருந்து இரண்டு கிலோகிராம் அரிசியினையும் பெற்றுக்கொள்கிறார். இருப்பினும், அவரது வருமானமானது ஏழு உறுப்பினர்களை உள்ளடக்கிய குடும்பத்தின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உணவுத் தேவையினை பூர்த்தி செய்வதற்கும் மற்றும் அவர் பெற்றுள்ள இரு கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கும் போதுமானதாக இல்லை. ‘நான் இலங்கை வங்கிக் கிளையில் எனது நிலத்தினை அடகு[16] வைத்துள்ளேன். நான் ஒரு மாதத்திற்கு ரூபா 2100ஐ செலுத்துகின்றேன்…நான் தொடர்ந்து ஐந்து தடவைக்கு மேல் பணம் செலுத்தாவிட்டால் அவர்கள் எங்களை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விடுவார்கள்’. சரோஜினி தனது மற்றுமொரு கடனை மின்சார இணைப்பிற்காகவும் மற்றும் ஏனைய தேவைக்காகவும் சமூர்த்தி வங்கியிடமிருந்து இலங்கை ரூபாயில் 50000ஐப் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

‘இந்த வேலை தொடர்பில் எளிதாக எதுவும் இல்லை’என சரோஜினி கூறியதோடு, பீடி உருட்டும் தொழிலிலோடு ஏனைய வருமானம் ஈட்டும் செயற்பாடுகளை செய்து கொண்டே தனது அன்றாட வீட்டு வேலைகளை கவனிப்பதென்பது மிகவும் கடினமானது என குறைக் கூறினார். ‘எல்லாமே கஷ்டம்தான்…துணி துவைப்பது கஷ்டம், நேரமாகியும் வேலை செய்வது கூட கஷ்டம்…சிறிது நேரம் உட்கார்ந்து செய்ய முடியும் என்பதால் பீடி பருட்டும் தொழில் ஏனைய வேலைகளை விட எளிதானது’, என்பது அவரது நேர்மையான பதிலாக இருந்தது.

உடல் மற்றும் உள ரீதியாக ஒழுங்குப்படுத்தப்படல் அல்லது பெண்கள் அவர்களது கணவர்கள் மூலம் கட்டுப்படுத்தப்படலானது, வருமானமொன்றினை உழைப்பதிலும் மற்றும் குடும்பத்தினை பராமரிப்பதிலும் சுமையை சேர்க்கின்றது எனவே, திரம்பட உருவாக்கப்படுகின்ற இந்த மூன்று சுமைகளையும் பெண்கள் தாங்க வேண்டியுள்ளது. சரோஜினியின் விடயத்தில், அவரது கணவர் தான் உழைக்கின்ற முழுவதையும் அவரிடம் ஒப்படைத்து விடுகின்றார் அதனைக் கொண்டு சரோஜினி வீட்டுக்கான செலவுகளை கவனித்துக் கொள்வதோடு தனது கணவர் கேட்கும் போதெல்லாம் பணம் கொடுக்க வேண்டும். ‘அவர் உழைக்கின்ற அனைத்தையுமே என்னிடம் கொடுத்து விடுவதோடு அவருக்குத் தேவைப்படும் போது என்னிடம் கேட்பார். அவருக்கு தேவைப்படும் போது நான் பணம் கொடுக்காவிட்டால் அவருக்கு கோபம் வந்துவிடும்’, எனக் கூறினார். பணம் கொடுக்க மறுப்பு தெரிவித்தால் உடல் ரீதியான பாதிப்பினை (அடித்தல்) எதிர்நோக்க வேண்டியிருக்கும். அவர் தனது கணவரின் நடவடிக்கைகளை பின்வருமாறு கூறுவதன் மூலம் நியாயப்படுத்த முற்பட்டார்: ‘மிகவும் கஷ்டப்பட்டு வேலைசெய்த பின் அவருக்கு குடிக்கவேண்டும் ஏனெனில் அவரது வேலை கடினமானது’ மற்றும் அவரது கூற்றுப்படி, அவரது கணவர் குடித்தபின் சிலநேரங்களில் வன்முறைகளை சந்தித்திருக்கிறார்.

உழைக்கின்ற பெண்கள் இதுபோன்ற கட்டுப்பாடுகளின் மத்தியில் இல்லத்தரசிகள் தமது பொறுப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் பெண்களுக்கான சுமை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. ஏதேனும் தவறுகள் அல்லது அவரது பிள்ளைகள் தவறாக நடந்து கொண்டால் சரோஜினியே அதற்கு பொறுப்பானவராவார்: ‘குழந்தைகளால் மற்றும் என்னால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து தவறுகளையும் அவர் அவதானிப்பதோடு குடித்துவிட்டு என்னை திட்டுவார்’. அவரது கணவர் குடும்பத்தின் பிரதான வருமானம் உழைப்பவராக இல்லாவிட்டாலும், அவர் சரோஜினியின் மீது குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்பாட்டினை மேற்கொள்கின்றார். ‘எனது பிள்ளைகளை நான் ஒழுங்காக கவனிக்காது விட்டால் எனது கணவர் என்னை அடிப்பார். நான் ஏதாவது தவறு செய்தால் மட்டுமே அவர் என்னை அடிப்பார். நாங்கள் சண்டையிட்ட போதிலும், சிறிது நேரத்தில் மீண்டும் சமாதானமாகி விடுவோம்’ என அவர் விளக்க முற்பட்டார். அவரது பால் சார்ந்த தொழிலாளர் நடிபங்கோடு இல்லத்தரசி மற்றும் உழைப்பவராக இருப்பதன் சுமை என்பவற்றோடு இணைக்கப்பட்டிருக்கின்ற அவரது உடல் ரீதியான வன்முறைகள் அனுபவத்திற்கான் சமர்ப்பணமாக உள்ளது.

[16]சரோஜினி தான் வாழ்கின்ற நிலத்தின் பெயரில் கடன் எடுத்துள்ளார்.

# 7. வன்முறை, உயிரற்ற முதலாளித்துவம் மற்றும் வெட்டிக்காடு பீடி கைத்தொழிலில் துறையில் குறைந்த சாதி பெண்களின் இனப்பெருக்கம்

## 7.1 இரட்டிப்புச் சுமை, போர் மற்றும் பெண்கள் உழைப்பு

மரபு வழி அரசியல் பொருளாதாரத்திலிருந்தான கண்ணோட்டத்தில் (Vogel, 2000; Bhattacharya, 2013) தொழிற்படை என்பது சந்தையின் உற்பத்தி செயன்முறை (Marx, 1867) என்பதில் உள்ளடக்கப்பட்டுள்ள வேளையில் சமையல் மற்றும் கவனிப்பு போன்ற தொழிலாளர்களை வலுவூட்டல் (மீட்டெடுத்தல்), அவர்களை அடுத்தநாள் தமது வேலைகளுக்குச் செல்ல அனுமதித்தல் என்பவை பெண்களின் தினசரி பராமரிப்பு நடவடிக்கையோடு ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பகுப்பாய்வானது, வெட்டிக்காட்டில் பீடி உருட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களினால் எதிர்கொள்ளப்படுகின்ற சுமைகளை விட உழைப்பின் பாலியல் பிரிவுகள் தொடர்பாக அமைகின்றது.

கீதாஞ்சலி, சரோஜினி மற்றும் ஆனந்தி அம்மா போன்ற பெண்களால் உண்மையில் தங்களை மீட்டெடுக்க முடிவதில்லை. எனவே, வேலை மற்றும் பாதுகாப்புச் சுமையின் போது அவர்கள் அன்றில் பாராமரிப்பு பாதிக்கப்படவில்லை என்பதை உறுதிபடுத்துவதற்கு தமது வேலைகளிலிருந்து சிறிது இடைவெளியினை எடுக்க வேண்டியுள்ளது அல்லது தூங்குதல், உண்ணுதல் போன்றவற்றினை விட்டுக்கொடுக்கவேண்டியுள்ளது (Painoli and Losarwar, 2012; Gopal, 1997 cited in Rustagi et al., 2001). பெண்கள் வன்முறை தொடர்பில் வெளிக்காட்டுவதில் தோல்வியடைகின்ற போதிலும், உடல் மற்றும் உளவியல் ரீதியான நலன்களை குறைக்கின்ற தீவிர வன்முறைகளாக கருதப்படுகின்ற இந்த இரட்டைச் சுமைகளை 'வெற்றிகரமாக' தாங்கி வருகின்றனர். பால் சார்ந்த குடும்ப செயற்பாடுகளை கடைப்பிடிப்பதற்கு மற்றும் பெண்களின் கடமைகளான பராமரிப்பு, வருமானம் உழைத்தல் போன்றவற்றிலுள்ள சமூகக் கட்டுப்பாடுகளை வரையறுப்பதற்கு இந்த பீடி வர்த்தகமானது பெண்களை அனுமதிக்கின்றது அத்தோடு ஒன்று மற்றொன்றுடன் கொண்டுள்ள வகிபங்குகளை மற்றும் தொழிலாளரின் இடம் மற்றும் பால் சார்ந்த பிரிவினையைக் கட்டமைப்பதற்கும் இந்த வாழ்வாதாரப் பொருளாதாரமான பீடி வர்த்தகமானது பெண்களை அனுமதிக்கின்றது எனலாம். பெண்கள் தம்மை ஆண் ஆதிக்கம் என்கின்ற வட்டத்திற்குள் துணிவாக நுழைக்க முயற்சித்தாலோ, மீன்பிடி அல்லது நகரின் நிரந்தரமற்ற தொழிலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முயற்சித்தாலோ அவர்கள் எதிர்நோக்குகின்ற வன்முறை எனும் ஆபத்தானது வலுப்படுத்தப்படுகின்றது.

எழுதப்படாத மற்றும் சமூக ரீதியான ஒப்பந்தங்கள் மூலம் பெண் தொழிலாளரின் முதன்மையான நடிப்பங்காக இந்த இனப்பெருக்கச் செயற்பாடு காணப்படுகின்றது (Kabeer, 2002) அது உற்பத்தி மற்றும் இனப்பெருக்கம் என்பவற்றினைப் பொறுத்து வரையறுக்கப்படுகின்ற பொறுப்புகள் மற்றும் பால்சார்ந்த நடிப்பங்குகளுடன் பெண்களை (மற்றும் ஆண்களை) பிணைத்துள்ளது. இத்தகைய ஒப்பந்தங்கள் மீன்பிடி போன்ற கிராமத்தின் பிராதான உற்பத்தி செயற்பாடுகளிலிருந்து பெண்கள் விலக்கிவைக்கப்படுவதில் பங்களிப்புச் செய்கின்றன, ஆனால் சந்தை உட்பட, வெட்டிக்காட்டினுள்ளே மற்றும் வெட்டிக்காட்டிற்கு வெளியே ஒரு ஆண் ஆதிக்க பொது வாழ்வில், பெண்களின் இயக்கம் மற்றும் வெளியக வேலைவாய்ப்புகள் என்பன ஆபத்தானதாகக் கருதப்படுகின்றன. இவையிரண்டும் இணைந்து பெண்களை வெட்டிக்காடு பீடி உற்பத்தியை நோக்கி அழுத்தம் கொடுக்கின்றன.

இந்த ஒப்பந்தங்களை மீறுவதாக பெண்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு வடிவிலான வன்முறைகளானது காணப்படுகின்ற போது வன்முறையிலிருந்து அவர்கள் சுதந்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. பெண்கள் முதன்மை உழைப்பாளராக இருந்தாலும் கூட அதிகாரத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்பதோடு நாகரிக பாலினம் சார்ந்த கருத்துக்களானது இயல்பாகவே வன்முறையை ஏற்றுக்கொண்டுள்ளது. பாலினத்தை ஒரு சமூகக் கட்டமைப்பாகக் கொண்டு இது போன்ற வன்முறைகள் உருவாக்கப்பட்டு மீள் உற்பத்தி செய்யப்படுவதோடு, அதிகார உறவுகள் மற்றும் சமநிலையின்மை என்பவற்றின் மீள் உற்பத்தியை செயற்படுத்துகின்றது (Confortini, 2006). 'பொருட்கள் சேவைகளின் உற்பத்தி மற்றும் வாழ்க்கையின் உற்பத்தி என்பன ஒருங்கிணைந்த செயற்பாட்டின் ஒரு பகுதியாகும்' (Luxton, 2006 cited in Bhattacharya, 2013), அத்தோடு அது ஒரு இயல்பான வன்முறைச் செயற்பாடு என்ற பின்னணியினைக் கொண்டு அமைந்துள்ளது.

ஏனைய காரணங்கள் குறிப்பாக யுத்தத்தினை கவனத்தில் கொள்கின்ற போது, அதனது இயல்புகளைக் குறிப்பிடுவது அவசியமாகும். உதாரணமாக, இலங்கையில் யுத்தமானது உண்மையில், பல மீனவ

சமூகங்களிலுள்ள பெண்களை, ஆண்கள் எதிர்நோக்குகின்ற குறிப்பிட்ட ஆபத்துகள் நிறைந்த வர்த்தகம் எனும் வட்டத்திற்குள் தள்ளப்பட்டிருப்பது சிறந்த முறையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது (Bohle and Funfgeld, 2007; Fernando and Moonesinghe, 2012). ஆனால் வெட்டிக்காட்டினை பொறுத்த வரை, எழுதப்படாத குடும்ப மற்றும் சமூக ஒப்பந்தமானது, தொழிலாளரின் இடம் மற்றும் பால் சார்ந்த பிரிவினையின் பராமரிப்பில் எந்தவித சிதைவினையும் ஏற்படுத்தவில்லை.

உண்மையில், யுத்தமானது பெண்களின் சுமையில் குறிப்பிடத்தக்களவு பங்கினை வகிக்கின்றது. கொலைகள், காணாமல் போதல் அல்லது கடத்தல் காரணமாக வெட்டுக்காடு பல ஆண்களை பெரும்பாலும் மீனவர்களை இழந்துவிட்டது. பெண்கள் யுத்தம் காரணமாக அவர்களது கணவன்மார்கள், தந்தையர்கள், சகோதரர்கள் மற்றும் மகன்களை இழந்துவிட்ட அதேநேரம் ஏனையவர்கள் காயம் காரணமாக திறனற்றவர்களாக அல்லது வேலை செய்வதற்கு திறனற்றவர்களாக உயிர் வாழ்கின்றனர். பெண்கள் இப்பீடிக் கைத்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் 'உழைப்புச் சக்தியினை சுமப்பவர்களாக' மாறியுள்ளனர். ஆனந்தியின் மகன் அவர்களை விட்டுப் பிரிந்து கிட்டத்தட்ட 20 வருடங்கள் ஆகின்றன, அவரது மகன் உயிருடன் இருந்திருந்தால் தான் இந்த வயதான காலத்தில் பீடி உருட்டும் தொழிலில் ஈடுபடத் தேவையில்லை எனப் புலம்புகின்றார்.

கணவன்மார்கள், தந்தையர்கள், சகோதரர்கள் மற்றும் மகன்கள் உயிருடன் இருக்கின்ற போதிலும், பராமரிப்பாளராக தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு பெண்கள் இந்த பீடி வர்த்தகத்தில் உழைக்க வேண்டியுள்ளது. காரணம், பெரும்பாலான ஆண்கள் தங்களை நம்பியுள்ள ஏழை மீனவர்கள் அத்தோடு, மீன்பிடி படகுகள் அத்தோடு எரிபொருள் வாங்குவதற்காக அக்கிராமத்திலுள்ள சக்திவாய்ந்த மேல் வகுப்பு ஆண்களிடம் அடிக்கடி கடன்களைப் பெற்றுள்ளார்கள். அதன் காரணமாக, பீடி உருட்டுவதன் மூலம் பெண்கள் உழைக்கின்ற பணமானது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. மீனவரான தனது கணவர் உழைக்கும் வருமானம் நிச்சயமற்றதாக இருப்பதால் தான் பீடி உருட்டும் தொழிலுக்கு செல்வதாக ஒரு பெண் குறிப்பிட்டார் அதாவது 'சில நேரங்களில் அவர் வீட்டிற்கு எந்தப் பணத்தினையும் கொண்டுவருவதில்லை எனவே அவரது வருமானத்தினை மட்டும் என்னால் நம்பியிருக்க முடியாது. முதல் நாள் கடலுக்குச் சென்று வெறுங்கையுடன் திரும்பி வந்திருக்கின்றார்' (கள ஆய்வு 2, நேர்காணல் 3). இன்னொரு வகையில் கூறுவதாயின், பீடி உருட்டுதல் மற்றும் மீன்பிடி ஆகிய இரண்டு வாழ்வாதாரப் பொருளாதாரமும் பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்துள்ளன.

## 7.2 முறைப்படியின்மை, உயிர் பிழைத்தல் மற்றும் திரட்சி

வெட்டுக்காடு பீடி உருட்டுபவர்கள் ஒவ்வொரு பீடிக் குச்சிக்கும் 50 சதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர் இது ஒரு குச்சிக்கான இறுதி சந்தைப் பெறுமதி அல்லது சில்லறை விற்பனை பெறுமதியோடு ஒப்பிடும் போது ஐந்தில் ஒரு பங்கினை விட அதிகமாகும். வேறு வார்த்தையில் கூறுவதானால், பெறுமதிச் சங்கிலியில் அவர்கள் ஐந்தில் நான்கு பங்குகள் மேலே இருக்கின்றனர். பெண்களின் வருமானமானது அவர்கள் உற்பத்தி செய்கின்ற பீடிக்களின் எண்ணிக்கையிலேயே முழுவதும் தங்கியுள்ளதோடு குறைந்தபட்ச இலக்குகளில் உற்பத்தி செய்வதில்லை. எனினும், பெரும்பாலான பெண்கள் தமது குடும்ப வேலைகள், குடும்ப பொறுப்புகள் மற்றும் உடலியல் வரம்புகள் போன்றவற்றினைக் கொண்டு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பீடிக்களை உற்பத்தி செய்கின்றனர் அல்லது சில நேரங்களில் அவர்களது அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்ய போதுமானதாக இல்லை எனக் குறிப்பிட்டனர். அவர்கள் பெற்றுக்கொள்கின்ற ஊதியம் அரிதாகவே போதுமானதாக இருப்பதோடு பொதுச் சேவைகளும் போதுமானதாக இல்லாததால் அவர்கள் கடன் வாங்கியே அதாவது கடனுக்கு உணவுப் பொருட்களை வாங்குதல், தமது நிலம் அல்லது நகைகளை அடகு வைப்பதன் மூலமும் குடும்பத்தினை நிர்வகிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர் அல்லது அவர்கள் உணவு அல்லது மருத்துவ சிகிச்சை போன்ற அத்தியாவசியத் தேவைகளை வெறுமனே குறைத்து விடுகின்றனர்.

பாலனின் படி, வெட்டிக்காட்டிலுள்ள பெண்கள் மாதத்திற்கு குறைந்தது 2.5 மில்லியன் குச்சிகளை பாரதி நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பதோடு ஒரு நல்ல மாதத்தில் இந்த எண்ணிக்கையானது இரட்டிப்பாகும். பாரதியின் அதிகாரிகள் நேர்காணலினை மேற்கொள்வதற்கு அனுமதிக்கவில்லை அல்லது நிதியியல் தகவல்களை பகிர்ந்து கொள்ளவில்லை, ஆனால் தொழிலின் ஒரு பகுதியாக வருடமொன்றுக்கு அண்ணளவாக ரூபா 4 மில்லியன் இலங்கை ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு குறிப்பிட்டளவு தொகை வரியாக செலுத்தப்படுகின்றது (Algama, 2016). பீடி விற்பனையானது 2007ல் 1.1 பில்லியன் குச்சிகளில்

இருந்து 2013ல் 3.2 பில்லியனாக அதிகரித்துள்ளதோடு, ஆறு ஆண்டுகளில் கிட்டதட்ட 200 சதவீத வளர்ச்சியடைந்துள்ளது (Dambawinna, 2014).

பீடிக் கைத்தொழிலானது நாடுகடந்த உயிரற்ற முதலாளித்துவ முறையினை விளக்குகின்ற ஒன்றாக உள்ளது அதாவது, சமூகப் பொருளாதார உறவுகளானது பெரும்பாலும் சுரண்டல்கள் மீதே அமையப்பெற்றுள்ளது என்பதை டெண்டு இலைகள் ஒரிஸ்ஸாவிலுள்ள வறிய ஆதிவாசி சமூகங்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் பீடி உருட்டுகின்ற குறைந்த சாதியினைச் சேர்ந்த யாழ்ப்பாண பெண்களிடம் கொண்டு வந்து சேர்க்கப்படுவதன் மூலம் விளங்க முடிகின்றது. வறிய குறைந்த சாதி பெண்கள் கடுமையான நோய் அல்லது மரணம் வரை இந்த பீடி உருட்டும் தொழிலில் ஈடுபடுகின்றனர். உற்பத்தி கூட வறியவர்களையே இலக்கு வைக்கின்றது மற்றும் ஒரு போதையை மலிவாக சந்தைப்படுத்துவதன் மூலம் பெரியளவிலான வறிய மற்றும் சமூதாயத்தின் ஒரு பெரிய செலவிலேயே இம்மிகப்பெரிய தனியார் இலாபங்கள் உழைக்கப்படுகின்றன. வருடமொன்றிக்கு 3 பில்லியன் பீடிக் குச்சிகள் நாட்டில் விற்பனையாவதோடு வறிய மக்களே அதிகளவில் பயன்படுத்துகின்றன மற்றும் இலங்கையில் வறிய மாவட்டங்களில் ஒன்றாக கருதப்படுகின்ற மொனராகலை மாவட்டத்திலேயே அதிகளவான பீடி நுகர்வாளர்கள் இருக்கின்றனர் (மது மற்றும் போதை தகவல் மையம் அல்கமவில் மேற்கோள் காட்டியது போல், 2016). பீடிக்கைத்தொழிலானது அதன் அடிப்படைத் தயாரிப்பாளர்கள் மற்றும் நுகர்வோர்களின் இழப்பினை ஆதாரமாகக் கொண்டுள்ளதோடு, பெருகிவருகின்ற வறிய மக்களை நம்பியிருக்கின்றது மற்றும் அதன் உற்பத்தி மற்றும் நுகர்வு மிகப்பெரிய ஆபத்தினைக் கொண்டுள்ளது.

**வெட்டிக்காடு: அபிவிருத்தி தோல்விக்கான முகமல்ல**

வெட்டிக்காட்டிலுள்ள பெண்கள் பாரதி நிறுவனத்திற்காக கடந்த 50 வருடத்திற்கும் மேலாக பீடி உருட்டும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். திட்டமிட்டமுறையில் தொழிலாளர்கள் மற்றும் குறைந்த ஜாதி பெண்களின் அமைப்புகள் முற்றிலும் சட்டப்பூர்வ நடவடிக்கையாக இருப்பதற்கு உதவுகின்ற துணை ஒப்பந்தமான, சுரண்டல் மற்றும் குறைந்தபட்ச கூலி, சமூக நலன்கள், காப்புறுதி, ஓய்வூதியம் அல்லது கூட்டாக பேரம் பேசுதல் போன்ற கடமைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளல் என்பனவும் அதிகரிக்கின்றது. இம்முழுச் செயற்பாடும் அரசாங்க அங்கீகாரம் உடையன: தொழிற்சாலை போன்ற பொது இடங்களில் பின்பற்றப்படுகின்ற சட்ட ஒழுங்குமுறைகள் வீட்டில் தனியார இடங்களில் இது போன்ற சட்ட கட்டுப்பாடுகள் பின்பற்றப்படாததால் பெண்களின் உழைப்பானது இரக்கமற்ற முறையில் சுரண்டப்படுகின்றது அத்தோடு எவ்வாறாயினும், எழுத்துவடிவில் பலவீனமானதாக உள்ளதோடு நடைமுறைப்படுத்தலில் தாமதம் நிலவுகின்றது.

ஆடைக்கைத்தொழிலிருந்து பெருந்தோட்டத்துறை மற்றும் வீதிகளை துப்புரவாக்குபவர்கள் மற்றும் வீட்டு ஊழியர்கள் வரை நாடு முழுவதும் இருக்கின்ற பெண்கள் அனைவரும் ஒரே மாதிரியான வன்முறையையே வெளிப்படுத்தி நிற்கின்றனர். மற்றும் உழைக்கும் பெண்களின் உடல்களானது இத்தகைய வன்முறைகளின் அடையாளங்களை சுமப்பதாக அமைந்துள்ளதோடு இத்தகைய வன்முறைக்கு அரசு இரு வழிகளில் உடந்தையாக உள்ளது. முதலாவது, பீடி உருட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு கிடைக்கக்கூடிய இலாபம் மற்றும் செலவின் அடர்த்தி போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டது. இரண்டாவது, பால்நிலை, சாதி, வர்க்கம் அடிப்படையிலான விலக்குகள் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டு வேரூன்றியுள்ள வறுமையை அடையாளப்படுத்த மறுக்கும் வகையில் யுத்தத்திற்கு பிந்திய அபிவிருத்தி திட்டத்திற்கு ஏற்ப பீடி உருட்டுதல் போன்ற ஒழுங்கமைவு வேலைகளிலிருந்து தப்ப முடியாதுள்ளது.

கீதாஞ்சலி, ஆனந்தி அம்மா போன்ற பெண்கள் அல்லது அவர்களுடைய குடும்பத்தினர்கள் அரசிடமிருந்து எந்த வகையான சமூக உதவிகளையும் பெற்றுக்கொள்வதில்லை. சமூர்த்தி போன்ற சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் அவர்களுக்கு மற்றும் அவர்களைப் போன்ற பலருக்கு அணுகமுடியாதுள்ளது. குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பிலான தன்னிச்சையான வரம்புகளால் அவசியமான ‘இலக்குகளை’ தேர்ந்தெடுக்க முடியும், ஆனால் இது யார் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்களோ அவர்களுக்கு அரசு உதவியை எடுத்துச் செல்வதில் தோல்வியடைகின்றது. பொது சுகாதார அமைப்பும் கூட பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான குறிப்பிட்ட உடல்நலத் தேவைகளுக்கு சரியான உதவியினை வழங்குவதில்லை. அதனால் ஏனைய பல துறைகளில் நிரந்தரமற்ற தொழில்புரிகின்ற பெண்களின் வழக்குகள் போலல்லாமல், அபிவிருத்தியை அடைவதில் பீடிக்கைத்தொழிலானது அதிகளவில் தவறிவிடவில்லை. இது ‘அடிப்படை மனிதத் தேவைகள் அல்லது மனித உரிமைகள் தவிர்க்கக் கூடிய ஒரு குறைபாடாக’ உள்ளன அத்தோடு அரசின் வழிகாட்டல் மற்றும் மூலதனத்தின் உந்துதல் மூலம் அரசியல் மற்றும் பொருளாதார முறையினூடாக பெண்கள் மீது திணிக்கப்படுகின்ற (Galtung 1993, cited in Ho, 2007: 3) கட்டமைப்பு வன்முறைக்கு இது ஒரு உதாரணமாகும்.

யுத்தத்தின் போது காணப்பட்ட வன்முறை நிலைமைகள் போலவே யுத்தத்திற்கு பின்னரும் எவ்வாறு வன்முறையானது மீள் உருவாக்கப்படுகின்றது என்பதற்கான ஓர் அடையாளமாக வெட்டிக்காட்டின் வன்முறைக் கட்டமைப்பின் இயல்பானது காணப்படுகின்றது. போருக்கு முன்னர் மற்றும் போருக்கு பின்னரான வெட்டிக்காட்டின் பீடி உற்பத்தியானது; மனிதால் கற்பனை செய்யக்கூட முடியாத நீடித்த தன்மையின் 'மறுசீரமைக்கப்பட்ட வாழ்வாதாரங்களின்' எளிமையான விளக்கவுரையாகவும் மற்றும் பீடி உருட்டுகின்ற பெண்களுக்கான பொருளாதார நீதி மற்றும் இடைநிலை நீதி தொடர்பான அப்பட்டமான விவாதங்கள் தற்போது மிகைப்படுத்தப்பட்டுள்ளன. (Nagaraj, 2016). அதனை வரிவாக்குவதற்கு, இது போன்ற தன்மை கொண்ட பொருளாதார உறவுகளை நிரந்தரமாக்கியுள்ளதோடு, வளர்ச்சி என்பது வேறு வழிகள் மூலமான வன்முறையாக இருக்கின்றது. பீடித் தொழில் செய்யும் பெண் தொழிலாளர்கள் தொடர்பில், 'வன்முறை சிக்கல்கள் மற்றும் அதிகாரப் போட்டிகளுக்குள் அமைந்த' எனும் சொற்றொடரானது 1913ம் ஆண்டு ரோசா லுக்சம்பேர்க்கினால் உள்ளடக்கப்பட்டது அத்தோடு இது 'பொருளாதாரப் போக்குகளின் கடுமையான சட்டங்களை' வேறுபடுத்துவதை கடினமாக்கியது (Luxemburg, 1951, cited in Harvey: 73).

# 8. முடிவுரை: ஒரு உயிரற்ற முதலாளித்துவம் நிலவும் இடத்தில் அமைந்த பெண்கள் அமைப்பு

பீடி கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் முகங்கொடுக்கின்ற சுரண்டலின் தன்மையினை விளங்கிக்கொள்வதற்கு நாம் கலந்துரையாடிய வெட்டிக்காட்டிலுள்ள ஒரு சில பெண்கள் குறைந்தபட்சம் பார்வையற்றவர்களாக இல்லை அல்லது அவர்கள் சகித்துக் கொள்கின்ற வன்முறை தொடர்பில் கவனமற்றவர்களாகவும் இல்லை ஆனால், அவர்களுக்கான எதுவிதமான மாற்றீடு வழிகள் ஏதும் அங்கே இல்லை. அவர்கள் பீடித் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை தனது குடும்பத்திற்கு ஆதரவாக பயன்படுத்திக் கொள்கின்றனர். ஆனந்தி அம்மாவினை ஒரு உதாரணமாக நோக்குகின்ற போது, அவரது குடும்பத்தின் பிரதான உழைப்பாளரான தனது மகனை யுத்தம் காரணமாக இழந்துவிட்டார்; அவர் இன்னும் தனது நோய்வாய்ப்பட்ட கணவருக்ககும் மற்றும் தனது ஊனமுற்ற மகனுக்கும் ஆதரவளிக்கின்ற அதேவேளை காணாமல் போன தனது மகன் தொடர்பான உண்மை மற்றும் நீதியினை தொடர்ந்தும் தேடிக்கொண்டிருக்கின்றார். தனது சொந்த குடும்பத்திற்கே அரிதாக உதவியாக இருக்கின்ற தனது மகளை சார்ந்திருக்க அவரால் முடியவில்லை.

சரோஜினியும் கூட, தனது கணவர் காயமுற்றதிலிருந்து குடும்பத்திற்கு ஆதரவு வழங்குவதில் முன்னிலையில் உள்ள அதேவேளை, அவர் தனது பிள்ளைகளை பாடசாலைக்கு செல்ல இயலந் செய்வதல் மற்றும் ஊக்குவிப்பதன் மூலம் தான் வறுமையிலிருந்து விடுபடுவதற்கு தடையாக இருந்த சமூகப் பொருளாதார கட்டமைப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கான ஒரு வழியினை வழங்கும் என எதிர்பார்க்கின்றார். இப்பீடித் தொழிலுக்கு மாற்றீடாக வேறு எந்த தொழிலும் இல்லாத நிலையில் இத்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் பெறப்படுகின்ற வருமானமானது ஒரு 'வாழ்க்கை பாதுகாப்பினை' வழங்குகின்ற போதிலும், இத்தொழிலானது இயல்பாகவே சுரண்டும் தன்மையினை கொண்டிருப்பதை அவர் அடையாளங்கண்டதோடு, தனது பிள்ளைகள் அதே பீடித்தொழிலில் ஈடுபடுவதை அவர் விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டார்.

பீடி உருட்டும் தொழிலில் ஈடுபடுகின்ற பல பெண்களின் வாழ்வில் தொடர்ந்தும் அழிந்துவிடாமல் இருக்கின்ற வன்முறை எனும் தலைவிதியிலிருந்து தமது பிள்ளைகள் தப்பித்துக் கொள்வார்கள் என நம்புகின்றனர். போர் தொடர்பான பாதிப்பினை எதிர்கொண்டு இன்னும் உயிருடன் இருக்கின்ற பலர் தனக்கான நீதி அல்லது உண்மையை தேடிக்கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் அவர்களில் பலர் குடும்பத்தின் தலைவராக செயற்படுகின்றனர் - அவர்கள் அனைத்து விதத்திலும் செயற்படாமல் குறைந்தது பொருளாதார ரீதியாக செயற்படுகின்றனர். வெட்டிக்காட்டில் பீடி உருட்டும் பெண்கள் வன்முறை சுரண்டலுக்கு உட்படுகின்ற அதே அளவுக்கு உயிர் பிழைப்பிற்கான ஒப்புகையாகவும் இருக்கின்றது. வன்முறை சுரண்டலின் சுழற்சியை உடைக்கும் வகையில் அரசு அல்லது அரசு அல்லாதவர்களின் தலையீடானது மத்தியில் இருக்க வேண்டும்.

# உசாத்துணை

Agarwal, B. (1994). *A field of one's own: Gender and land rights in South Asia*. Cambridge: Cambridge University Press.

Ahiakpor, J.C.W. (1985). 'The success and failure of dependency theory: The experience of Ghana'. *International Organisation,* 39, 535-553.

Algama, P. (2016). 'Alarm bells on beedi smoking'. *Ceylon Today*, 14 February. Available at: www.ceylontoday.lk/90-118079-news-detail-alarm-bells-on-beedi-smoking.html.

Bhattacharya, T. (2013). 'Explaining gender violence in neoliberal era'. *International Socialist Review,* 91.

Bohle, H.G. and Funfgeld, H. (2007). 'The political ecology of violence in eastern Sri Lanka'. *Development and Change,* 45(4), 665-687.

Brown, A. (2012). 'A critical assessment of women's livelihoods in post-conflict Sri Lanka'. A thesis submitted in fulfillment of requirements for the degree of Research Masters of Science at the University of Amsterdam in the Graduate School of Social Sciences. Available at:
from: http://dare.uva.nl/cgi/arno/show.cgi?fid=492432

Central America Women's Network (CAWN) (2010). *Intersecting Inequalities: A Review of Feminist Theories and Debates on: Violence against Women and Poverty in Latin America*. London: CAWN.

Confortini, C. (2006). 'Galtung, violence, and gender: The case for a peace studies/feminism alliance'. *Peace & Change,* 31(3).

Connell, R.W. (2005). 'Hegemonic masculinity: Rethinking the concept'. *Gender & Society,* 19(6), 829-859.

Crenshaw, K.W. (1995). *Critical race theory*. New York: New Press: 357-83.

Dambawinna, S. (2014). 'Beedi, cheaper alternative for the 'poor man'.' *Sunday Times*, 27 July. Available at: www.sundaytimes.lk/140727/business-times/beedi-cheaper-alternative-for-the-poor-man-108087. html.

Dissanayaka, D. and Wijeyaratne, M. (2010). 'Impact of women involvement in fisheries on socioeconomics of fisher households in Negombo, Sri Lanka'. *Sri Lanka Journal of Aquatic Sciences,* 14, 45-57.

Evans, P. (1979). *Dependent development: The alliance of multinational, state and local capital in Brazil*. Princeton, US: Princeton University Press.

Fernando, P. and Moonesinghe, S. (2012). *Livelihoods, basic services and social protection in Sri Lanka*. SLRC Working Paper 6: 1-29. London: Secure Livelihoods Research Consortium.
Gereffi, G. (1978). 'Drug firms and dependency in Mexico: The case of the steroid hormone industry'. *International Organization,* 32, 237-286.

Gopal, M. (1997). 'Labour process and its impact on the lives of women workers: A study of the Beedi industry in Keelapavoor block of Tirunelvelli District.' Unpublished PhD thesis, Centre of Social Medicine and Community Health. New Delhi: Jawaharlal Nehru University.

Greico, J.M. (1990). *Cooperation among nations: Europe, America and non-tariff barriers to trade*. Ithaca: Cornell University Press.

Harvey, D (2009). 'The 'New' Imperialism: Accumulation by Dispossession'. *Social Register,* 40, 73.

Ho, K. (2007). 'Structural violence as a human rights violation'. *Essex Human Rights Review*, 4(2).

Kabeer, N. (2002). *The power to choose: Bangladeshi women and labour market decisions in London and Dhaka*. London and New York: Verso.

Keohane, R.O. and Milner, H.V. (eds) (1996). *Internationalisation and domestic politics.* Cambridge: Cambridge University Press.

Krasner, S.D. (1991). 'Global communications and national power: Life on the Pareto frontier.' *World Politics,* 43, 336-366.

Lokuge, G. (forthcoming, 2016). *Outside the net*. SLRC Working Paper series. London: Secure Livelihoods Research Consortium.

Marx, K. (1867). *Capital I*. Moscow: Progress Publishers.

Nagaraj, V. (2016). 'Beyond reconciliation and accountability: distributive justice and Sri Lanka's transitional agenda'. Open Democracy, 18 May. Available at: www.opendemocracy.net/openglobalrights/vijay-k-nagaraj/putting-distributive-justice-on-sri-lanka-stransitional-agenda.

Nakkeeran, S.K. and Pugalendhi, S.B. (2010). *A study on occupational health hazards among women beedi rollers in Tamil Nadu, India*. Available at: https://core.ac.uk/download/files/432/12026397.pdf.

National Commission for Women (2005). *A Report on Women Beedi Workers*. New Delhi. Available at: http://ncw.nic.in/pdfreports/Women%20Beedi%20Workers.pdf.

Painoli, G.K. and Losarwar, S.G. (2012). 'A study of various HRM Issues in beedi industry situated in Nizamabad District of Andhra Pradesh.' *Voice of Research,* 1(2), 1-6.

Ram, K. (1992). *Mukkuvar women: Gender, hegemony and capitalist transformation in a South Indian community*. New Delhi: Kali for Women.

Rustagi et al. (2001). *Survey of studies on beedi industry – with special emphasis on women and child labour*. New Delhi: The Centre for Women Development Studies.

Ruwanpura, K. (2006). *Matrilineal communities, patriarchal realities: A feminist nirvana uncovered*. Colombo: Social Scientists Association.

Schrock, D. and Schwalbe, M. (2009). 'Men, masculinity, and manhood acts'. *Annual Review of Sociology,* 35, 277-295.

True, J. (2012). *The political economy of violence against women*. New York: Oxford University Press.

Vogel, L. (2000). 'Domestic labour revisited'. *Science and Society,* 64(2), 156.

Whyte, D. (2009). 'Naked labour: Putting Agamben to work'. *Australian Feminist Law Journal*, 31(1), 57-76.

Yin, R. (2012). *Applications of case study research* (3rd ed.). Thousand Oaks: Sage Publications.

## இணைப்பு 1: பதிலளித்தவர்களின் விபரம்

| பெயர் (புனைப்பெயர்) | தொழில் | இடம் | வயது | பால் | நேர்காணல்/ இலக்கு குழு கலந்துரையாடல் |
|---|---|---|---|---|---|
| விஜய் | கிராமிய மீனவர் சங்கத்தின் முன்னால் செயலாளர், சனசமூக நிலையத்தின் முன்னால் உறுப்பினர் | கிராமம் | 65 | ஆண் | நேர்காணல் |
| நாதன் | கிராமிய மீனவர் சங்கத்தின் தற்போதைய தலைவர் | கிராமம் | 70 | ஆண் | நேர்காணல் |
| லக்ஷ்மி | கிராமத்திலுள்ள ஒரேயொரு பெண் மீனவர் மற்றும் பீடி உருட்டுபவர் | கிராமம் | 40 | பெண் | நேர்காணல் |
| சரோஜினி | பீடி உருட்டுபவர் மற்றும் உணவு விநியோகிப்பவர் | கிராமம் | 37 | பெண் | இலக்கு குழு கலந்துரையாடல்/நேர்காண ல் |
| கீதாஞ்சலி | கிராமிய பீடி நிறுவனமொன்றின் மேற்பார்வையாளர் | கிராமம் | 50 | பெண் | நேர்காணல் |
| ஆனந்தி | பீடி உருட்டுபவர் | கிராமம் | 80 | பெண் | நேர்காணல் |
| பாலன் | பீடி நிறுவனத்தின் துணை ஒப்பந்தக்காரர் | செயற்பாடு களின் தலைவர் | 68 | ஆண் | நேர்காணல் |



மே 2009ல் இலங்கையின் நீண்டகால யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், நாட்டின் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலுள்ள பெண்களுக்கு எதிரான உடல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைக்கெதிராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட்டது. இக்கற்கையானது, உடல் ரீதியான வன்முறை வடிவங்களைத் தாண்டி அரசியல், பொருளாதார உறவுகள் மற்றும் செயல்முறைகள் மூலமாக உருவாக்கப்பட்டு நிலைத்துள்ள கட்டமைப்பு வன்முறையை வெளிச்சத்திற்கு கொண்டுவரவும் பால், இனம் மற்றும் வர்க்கம் என்பனவற்றுடன் அவை கொண்டுள்ள இடைத்தொடர்புகளையும் நோக்க முனைகின்றது.

cepa
centre for poverty analysis
29, R G Senanayake Mawatha,
Colombo 7, Sri Lanka
Tel:+94 (011) 4690200, 2676955
Fax: +94 (011) 2676 959
E-mail: info@cepa.lk
www.cepa.lk

Secure Livelihoods Research Consortium

ODI

9 789551 040987